பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்
நாவாந்துறைப் படிப்பகம்

பக்கங்கள் பத்து
விலை ரூபா 5-00
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
# VALAMPURI

அதி நவீன மோஸ்தர்களில்
தரம் குன்றா
தங்க நகைகளுக்கு
அர்ச்சனா
ஜுவலர்ஸ்
118, கஸ்தூரியார் வீதி,
176/1, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

தங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2032 புரட்டாதி 15 திங்கட்கிழமை (01-10-2001) தொலைபேசி 3378 ஒலி 294

## ● தற்கொலைக் குண்டுதாரியின் அங்கி கண்டெடுப்பு

# கொழும்பு நகரில் பாரிய தேடுதல்

# 50 தமிழ் இளைஞர் யுவதிகள் கைது!

## தமிழர் மத்தியில் பதற்றம்

(நமது நிருபர்)

**தற்கொலைக் குண்டுதாரிகள் பயன்படுத்தும் அங்கிகள் கண்டுபிடிக்கப் பட்டதை அடுத்து கொழும்பு நகரில் பாரிய தேடுதல் வேட்டை ஒன்றை பாதுகாப்புப் படையினர் நேற்று முன்தினம் இரவு முதல் நேற்று அதிகாலை வரை நடத்தியுள்ளனர்.**

**இத் தேடுதலின் போது கொழும்பின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த சுமார் 50க்கும் அதிகமான தமிழ் இளைஞர்கள் கைது செய்யப் பட்டு விசாரணைக்காக தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.**

கொழும்பு விகாரமாதேவி பூங்காவின் பின்புறவாசலுக்கு அண்மையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த, அதிசக்தி வாய்ந்த குண்டுகள்பொருத்தப்பட்டிருந்த அங்கி ஒன்றினைப் பூங்காவை சுத்தம் செய்யும் பணியில் இருந்தவர்கள் கண்டுபிடித்திருந்தனர்.

இது குறித்து பொலிசாருக்குக் கொடுத்த தகவலை அடுத்து குண்டுகள் பொருத்தப்பட்ட அங்கிகள் எடுக்கப்பட்டு உடனடியாக அப்பகுதி சுற்றிவளைக்கப்பட்டு தமிழ் மாணவன் ஒருவனைப் பொலிசார் கைதுசெய்துள்ளனர்.

இதனையடுத்து கொழும்பு நகர்ப்பகுதியில் திடீர் சுற்றிவளைப்பு ஒன்றினை நேற்று முன்தினம் இரவுமுதல்நேற்று அதிகாலைவரை பொலிசாரும் இராணுவத்தினரும் இணைந்து மேற்கொண்டிருந்தனர்.

இச்சுற்றுவளைப்புத் தேடுதலின்போது சுமார் 50க்கு மேற்பட்ட தமிழ் இளைஞரும் யுவதிகளும் கைதுசெய்

(10ம் பக்கம் பார்க்க)

## மரதன் ஓட்டம் ஓடிய இளைஞன் வீழ்ந்து மரணம்

### திருநெல்வேலியில் சம்பவம்

[கோண்டாவில்]

மரதன் ஓட்டநிகழ்வில் ஓடிக்கொண்டிருந்த வீரன், மயங்கி வீழ்ந்து அந்த இடத்திலேயே பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

இச் சோகச் சம்பவம் நேற்றுக்காலை 7.45 மணியளவில் திருநெல்வேலி சந்தியில் இடம்பெற்றது.

சம்பவத்தில் கோண்டாவில் கிழக்கு வன்னியசிங்கம் வீதியைச் சேர்ந்த விக்னேஸ்வரன் சிவானந்தராஜா [வயது 23] என்பவரே உயிரிழந்தவராவர்.

இச் சம்பவம் பற்றி தெரிய வருவதாவது;

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ அற்புத நர்த்தன விநாயகர் சனசமூகநிலையமும், குமரன் விளையாட்டுக் கழகமும் இணைந்து நடாத்திய பாலர் பாடசாலை விளையாட்டு விழாவின் முன்னோடி நிகழ்வாக ஐந்துமைல்தூர மரதன் ஓட்ட நிகழ்வு நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலந்து ஓடிக்கொண்டிருந்தபோதே பிரஸ்தாப இளைஞன் திருநெல்வேலி சந்தியில் மயங்கி வீழ்ந்து உயிரிழந்துள்ளார்.

[10ம் பக்கம் பார்க்க]

## நம்பிக்கையில்லா பிரேரணை 9ந் திகதி விவாதிக்கப்படலாம்

### ஐ. தே. கட்சி நம்பிக்கை

[கொழும்பு]

பாராளுமன்றம் இம்மாதம் 9ம்திகதிகூடும்போது நம்பிக்கைஇல்லாத்தீர்மானம் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படலாம் என்று ஐக்கியதேசியக்கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்த நம்பிக்கைஇல்லாப் பிரேரணையில் அரசாங்கம் தோற்குமாக இருந்தால் பாராளுமன்றத்தை உடனடியாகக் கலைக்கக்கூடிய வாய்ப்புக்கள் அதிகம் இருப்பதாக அரசுவட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

நம்பிக்கைஇல்லாத்தீர்மானம் வெற்றிபெறுமாக இருந்தால் பாராளுமன்றத்தை கலைத்து விட்டுத் தேர்தலை நடத்துவதை தவிர அரசிக்கு வேறு வழிகள் இல்லை என அரசின் சிரேஷ்ட அமைச்சர்கள் பலர் கருத்து வெளியிட்டுள்ளனர்.

பாராளுமன்றம் கலைக்கப்பட்டால் அடுத்தவருடம் ஜனவரிமாதத்தில் புதியதேர்தல் ஒன்று நடைபெறலாம் என்று அரசியல் வட்டாரங்களில்

## தலை துண்டிக்கப்பட்ட இரண்டு சடலங்கள்

### மருதானையில் பரபரப்பு

(கொழும்பு)

கொழும்புப் பகுதியில்தலை துண்டிக்கப்பட்ட நிலையில் இரண்டு சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

தலை வெட்டப்பட்ட நிலையில் காணப்பட்ட இவ்விருசடலங்களில் ஒன்று பஞ்சிகாவத்தை பாலத்துக்கடி மருதானை டார்லிவீதியிலும் காணப்பட்டது.

இதில் ஒருசடலம் ஆணினுடையதெனவும் இவர் முஸ்லிம் இனத்தைச் சேர்ந்தவரெனவும் தெரிய வந்துள்ளது மற்றையது பெண்ணின் சடலம் என்பது குறிப்பிடத்தக்கது. இச் சடலங்கள் அப்

[கொழும்பு]

பாராளுமன்றம் இம்மாதம் 9ம்திகதிகூடும்போது நம்பிக்கைஇல்லாத்தீர்மானம் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படலாம் என்று ஐக்கியதேசியக்கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன;

இந்த நம்பிக்கைஇல்லாப் பிரேரணையில் அரசாங்கம் ... பாராளுமன்றத்தை உடனடியாகக் கலைக்கக்கூடிய வாய்ப்புக்கள் அதிகம் இருப்பதாக அரசுவட்டாரங்கள் தெரிவித்துள்ளன;

நம்பிக்கைஇல்லாத்தீர்மானம் வெற்றிபெறுமாக இருந்தால் பாரளுமன்றத்தை கலைத்து விட்டுத் தேர்தலை நடத்து ... வழிகள் இல்லை என அரசின் சிரேஷ்ட அமைச்சர்கள் பலர் கருத்து வெளியிட்டுள்ளனர்.

பாராளுமன்றம் கலைக்கப்பட்டால் அடுத்தவருடம் ஜனவரிமாதத்தில் புதியதேர்தல் ஒன்று நடைபெறலாம் என்று அரசியல் வட்டாரங்களில் பரவலாகப் பேசப்படுகிறது;

[வ]

(கொழும்பு)

கொழும்புப் பகுதியில்தலை துண்டிக்கப்பட்ட நிலையில் இரண்டு சடலங்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது;

தலை வெட்டப்பட்ட நிலையில் காணப்பட்ட இவ்விருசடலங்களில் ஒன்று பஞ்சிகாவத்தை பாலத்துக்கடியில் சாக்கில் கட்டப்பட்ட நிலையிலும் மற்றையசடலம் மருதானை டார்லிவீதியிலும் காணப்பட்டது;

இதில் ஒருசடலம் ஆணினுடையதெனவும் இவர் முஸ்லிம் இனததைச் சேர்ந்தவரெனவும் தெரிய வந்துளளது மற்றையது பெண்ணின் சடலம் என்பதுவ குறிபபிடத்தக்கது. இச் சடலங்கள் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (வ)

### தலைவனின் மரணச்சடங்கிற்கு

# பஸ்சில் சென்ற சிப்பாய் சுட்டுக் கொல்லப்பட்டார்

(மட்டக்களப்பு)

வாழைச்சேனை கிரான் வீதியில் பயணிகள் பஸ் ஒன்றை சீருடை தரித்தவர்கள் சிலர் சோதனையிடமுற்பட்டபோது, பயணம்செய்து கொண்டிருந்த இராணுவச் சிப்பாய் ஒருவர் தப்பியோட எத்தனித்ததால் சுட்டுக் கொல்லப்பட்டார்;

நேற்றுக் காலை இடம் பெற்ற இச்சம்பவத்தில், சித்தாண்டி இராணுவ முகாமில் கடமையாற்றும சரத்சந்திர சிறி என்ற சிப்பாயே சுட்டுக் கொல்லப்பட்டவராவர்

சம்பவம்பற்றி மேலும் தெரியவருவதாவது:

பிரஸ்தாப சிப்பாய், விமா

(10ம் பக்கம் பார்க்க)

# பரு.கடலில் காணாமல் போன 12மீனவரை ஈ.பி.டி.பியினர்மீட்டனர்!

## மேலும் மூவரைக் காணவில்லை

[மந்திகை]

பருத்தித்துறைக் கடற்பரப்பில் கடந்த மாதம் 1 ஆம் திகதி இடம் பெற்ற கடடு மரக்குண்டு வெடிப்புச்சம்பவத்தையடுத்து நீண்டநாட்களாக கடலில் இருந்த வள்ளங்கள் வலைகளை மீட்பதற்கு படையினர் நேற்று முதல் அனுமதி வழங்கியிருந்தனர்.

இதனையடுத்து தமது வள்ளங்களை மீட்பதற்காக சென்ற மீனவர்களில் 15பேர் நேற்று இரவு ஆறு மணி வரை கரை திரும்பாததைத் தொடர்ந்து அவர்களின் உறவினர்களால், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் முறைப்பாடு செய்யப்பட்டது

இதனையடுத்து அமைச்சரின் பணிப்பின்பேரில் ஈ.பி.டி.பியின் யாழ் மாவட்டத்

(1ம் பக்கம் பார்க்க)

# வல்வெட்டித்துறை சிவன்கோவிலில் தீவிபத்து கொட்டகை எரிந்து நாசம்

(மீசாலை)

வல்வெட்டித்துறை சிவன் கோவிலில் நேற்றுஇரவு ஏற்பட்ட தீவிபத்தினால் ஆலயத்தின் கொட்டகையொன்றும், இரண்டு பெரியஜெனரேற்றர்களும் எரிந்துநாசமாகின;

இத்தீவிபத்தை ஆலயஅர்ச்சகரும் அயலிலுள்ள மக்களும் பெரும் சிரமத்தின் மத்தியில் அணைத்ததனால் ஏனைய இடங்களுக்கும் தீ பரவுவது தடுக்கப்பட்டது;

மின்ஒழுக்குக் காரணமாகவே இத்தீவிபத்து ஏற்பட்டதாகத் தெரியவருகிறது;

[ந-222]

# திருமலையில் இளைஞன்

## சுட்டுக கொலை

(திருகோணமலை)

வீட்டில் தொலைக்காட்சி பார்த்துக் கொண்டிருந்தவர்கள் மீது இனம்தெரியாதோர் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தினால் இளைஞர் ஒருவர் கொல்லப்பட்டார்; மற்றொருவர் படுகாயமடைந்துள்ளார்.

(10ம் பக்கம் பார்க்க)

### விமான விபத்தில்

# இந்தியமுத்தஅரசியல்வாதி மாதவராவ்சிந்தியா பலி

(புதுடில்லி)

இந்தியாவின் முன்னணி அரசியல் தலைவராகத் திகழ்ந்த இந்திரா காங்கிரஸ்கட்சியின் மக்களவைத் துணைத் தலைவர் மாதவராவ்சிந்தியா (வயது-55)நேற்றுஇடம் பெற்ற விமான விபத்தில் உயிரிழந்துள்ளார்;

இவருடன் விமானத்தில் பயணம் செய்த ஐந்து அரசி

[10ம் பக்கம் பார்க்க]

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## சிறு விளம்பரம்

### வீடற்றவன்

அராலியூர் ந:சுந்தரம் பிள்ளை எழுதிய வீடற்றவன் நாவலின்விளக்கமும் விமர்சனமும், நூல், 10 ஆம் 11ஆம் தரங்களில்மாணவர்கள்விருப்பப்பாடமான தமிழ் இலக்கியம் கற்கப் பயன்படும் ,50 பக்கங்கள் ரூபா 25.00:
[3598]

## குட்டியப்புலத்தில் விரைவில் நூல் நிலையம்

(ஏழாலை)

குட்டியப்புலம் கிராமத்தில் பொது நூலகம் ஒன்று விரைவில் திறந்து வைக்கப்படவுள்ளது:

வலி. வடக்கு பிரதேச செயலகப் பிரிவின் கீழ் உள்ள இப்பகுதியில் நூல் நிலையம் அமைய உள்ளமை அப் பகுதி மாணவர் மற்றும் பொது மக்களின் அறிவு வளர்ச்சிக்கு பெரும் வாய்ப்பாக இருக்கும் என்று தெரிவிக்கப்படுகிறது:

இந் நூல் நிலையம் அமைப்பதற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நிதி ஒதுக்கீடு செய்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது: (க-12)

## விபத்தில் காயம்

(மந்திகை)

இருமோட்டார் சைக்கிள்ள் ஒன்றுடன்ஒன்று மோதிபதில் ஏற்பட்ட விபத்தில் பலத்த காயங்களுக்குள்ளாகிய இரு இளைஞர்களும் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவ் விபத்து புலோலி சாரையடியில் கடந்த வியாழக்கிழமை ஏற்பட்டது:

புலோலி மேற்கு துறையா மூலையைச்சேர்ந்த வி.சுபாஸ்கரன் (வயது 60) புற்றளையில் வசிக்கும் ப. பிரதீபன் (வயது – 25) ஆகிய இருவருமே இவ்வாறு விபத்துக்குள்ளானவர்களாவர்: (செ-23-52)

## நிதி வழங்க முடிவு

(நவாலி)

வலி.தென்மேற்கு மானிப்பாய்ப் பிரதேச சபைஎல்லைக்குட்பட்ட சனசமூக நிலையங்களுக்கு நன்கொடை நிதி வழங்க பிரதேச சபை தலைவர் வெ.அ. ஜோன்சன் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்,

மேற்படி பகுதிக்குள் அமையும் சனசமூக நிலையங்கள் ஏ.பி தரம்ஆக பிரிக்கப்பட்டு வங்கிகளின் ஊடாக நிதி வழங்க பிரதேசசபைத் தலைமை அலுவலக உள்ளூராட்சி உதவியாளர் நடவடிக்கை மேற்கொண்டுவருவதாகவும் மேலும்தெரிவிக்கப்படுகிறது, (க-228)

வடமராட்சி புறநிலைப் படிப்புகள் அலகு சான்றிதழ் பெறுவோர்

திருமதி செ. உஷாதேவி
,, அ. தேவராணி
,, பி. யோகராணி
,, மு. பிரியா
செல்வி தி. தயாளினி
,, க. தீபா
,, சி. காஞ்சனா
,, ச. தயாநிதி
,, அ. அமுதா
,, க. மோகனா
,, த. ஜமுனா
,, வ. சிவனேஸ்வரி

முன்பள்ளி ஆசிரியைகள்
[3803]

## இன்றைய சிறுவர் நாம்

நாளைய உலகின் இன்றைய குரல்கள்
இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள்!
நாளைய உலகம் நலமாக மிளிர
இன்றே செயற்பட இணைந்திடுவோமே!

அரியகுமார் யசிகரன்,
க. கு. அ. இல- 127.

## முதியோரை ஒதுக்காமல்

நரை திரை தோன்றி விட்டதாலும்
நாலிருபது வயது ஆனதாலும்
கரையினிலே முதியோரை ஒதுக்காமல்
காரியங்கள் நடத்திட வேண்டுமே

செல்வி க. ஜனனி

● இன்று கொண்டாடப்படும்உலக சிறுவர், முதியோர் தினத்தை ஒட்டிய கவிதைகள்:

# 10 தண்ணீர் பவுசர்கள் விரைவில் யாழ். வரும்

## அமைச்சர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டு மக்களின் குடி தண்ணீர் தேவையினைப் பூர்த்தி செய்யும் பொருட்டு உடனடியாக 10 தண்ணீர் பவுசர்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாகவும் அவை எந்த நேரமும் யாழ்ப்பாணம் வந்து சேரலாம் எனஅமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

யாழ்.நகரப்பகுதி உட்பட தென்மராட்சி தீவுப் பகுதி போன்ற பல இடங்களில் நிலவும் குடி தண்ணீர் தட்டுப்பாட்டினை நிவர்த்தி செய்யும் பொருட்டே இந் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்மேலும் குடா நாட்டு மக்களின் போக்குவரத்து சேவையினை மேம்படுத்தும் முகமாக 10 லான்மாஸ்ரர்களும் 5 ரைக்ரர்களும் உடன் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதெனவும் அவை எந்த நேரத்திலும் குடாநாடுவந்து சேரலாம் என எதிர்பார்க்கப்படுவதாகவும் அவர்குறிப்பிட்டுள்ளார்.

மேற்படிவாகனங்களின்மூலம் குறிகாட்டுவான்மன்னார் படகு சேவையின் ஊடாகமரக்கறிப் பயிரை ஏற்றுமதிசெய்யலாம். எனவும் தெரிவித்தார்: (க-10)

## ஆஸ்பத்திரி முன்பாக

# வாகனம் நிறுத்த விதித்த தடையை நீக்குக

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரில் வீதிகளை மூடி வைத்திருத்தல் வீதிக்குக் குறுக்கே பாதுகாப்பரண்களை அமைத்தல் போன்ற படையினரின் நடவடிக்கைகளினால் மக்கள் போக்குவரத்துச் செய்வதில் பல அசௌகரியங்களை எதிர் கொண்டிருக்கும் இவ்வேளையில் நகரின் மத்தியில் வாடகைக் கார், ஆட்டோ என்பவற்றை நிறுத்துவது தடை செய்யப்பட்டிருப்பது ஏற்றுக் கொள்ளக் கூடியதுஅல்ல. இவ்விடயம் சம்பந்தப்பட்டவர்களுக்குச் சுட்டிக்காட்டப்பட்டு மீளபரிசீலனை செய்யப்பட வேண்டும்.

யாழ். மாநகர முதல்வர் என். ரவிராஜ் தலைமையில் நடைபெற்றமாநகரசபையின் மாதாந்தக் கூட்டத்தின் இரண்டாம் நாளான நேற்று முன்தினம் புளொட் அமைப்பின் மாநகரசபை உறுப்பினர் மு. தவநாதன் உரையாற்றுகையில் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதற்குப் பதிலளித்துப் பேசிய மாநகர முதல்வர், மேற்படி விடயம் தொடர்பான முறைப்பாடொன்று நாளைய தினம் யாழ். பொலிஸ் நிலையத்தில் கொடுக்கப்படவுள்ளதாகத் தெரிவித்தார். (உ-106,19)

# விவசாயக் கடன்களை மீள அறவிட வேண்டாம்

## ஜனாதிபதி அறிவிப்பு

[கொழும்பு]

விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட விவசாயக் கடன்களை மீள அறவிட வேண்டாமென ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க உத்தரவிட்டுள்ளார். இவ்வறிவித்தல்தொடர்பான சுற்று நிருபங்களை இலங்கை மத்திய வங்கித் தலைவர், இலங்கை வங்கிதலைவர் மக்கள் வங்கித்தலைவர், பிரதேச அபிவிருத்தி வங்கித்தலைவர் மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் ஆகியோருக்கு நிதி திட்டமிடல் அமைச்சின் செயலாளர் பீ.வி. ஜயசுந்தர அனுப்பி வைத்துள்ளார். (உ-5)

## செய்முறைப் பரீட்சை

(மந்திகை)

மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயத்தில் இவ்வருடம் க.பொ.த. (சா/த) பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களில் விவசாயம், மனைப்பொருளியல் ஆகிய பாடங்களுக்கு விண்ணப்பித்தவர்களுக்கான செய்முறைப் பரீட்சை எதிர்வரும் சனிக்கிழமை யார்க்கரு விநாயகர் வித்தியாலயத்தில் இடம் பெறவுள்ளதாக பாடசாலை அதிபர் தெரிவித்துள்ளார். (க- 23)

## நெற் செய்கை மும்முரம்

(அராலி)

அண்மையில் பெய்த மழையை அடுத்துஅராலி, வட்டுக்கோட்டை, சங்கானை பகுதி விவசாயிகள் பெரும் போக நெற்செய்கையில் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர். (செ-21)

## திடீர் சோதனை

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் பகுதியில் நேற்று முன் தினம் இரவு 7.00மணியளவில்படையினரால்திடீர்ச் சோதனை நடத்தப்பட்டது (செ-9

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் வியாழக்கிழமை காலை 10. 00மணிக்கு தென்மராட்சிப் பகுதி பாடசாலை அதிபர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று அமைச்சர் டக்ளஸ்தேவானந்தா தலைமையில் அவர் பணிமனையில் இடம்பெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் ஆசிரியர்கள், அதிபர்கள், மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினை குறித்து ஆராயப்படுமென்று தெரிவிக்கப்படுகிறது: (எ- 10)

## முதியோர்தின விழா

ஊர்காவற்றுறை பிரதேச மட்ட முதியோர் தினவிழா நாளை 2ஆம்திகதி காலை 10 மணிக்கு யாழ் கரம்பொன் சிறியபுஷ்பமகளிர் மகாவித்யாலயத்தில் இடம்பெறவுள்ளது.

ஊர்காவற்துறை உதவிஅரசாங்கஅதிபர்ஜே.எக்ஸ்.செல்வநாயகம் அவர்களின் தலைமையில் இடம்பெறவுள்ள முதியோர்தின விழாவிற்கு யாழ்மாவட்டமேலதிக அரசாங்கஅதிபர் து.வைத்திலிங்கம், ஊர்காவற்துறை பிரதேசசபைத்தலைவர் நடமதன ராஜா ஆகியோர்பிரதமவிருந்தினர்களாகவும் ஊர்காவற்துறைப் பல.நோ.கூ.சங்கத் தலைவர் த.சத்தியதாசன். யா.புனிதஅந்தோனியார் கல்லூரிஅதிபர் அருட்திரு.ஜே.எ யேசுதாஸ்அடிகளார், யாழ் கரம்பொன்சிறிய புஷ்பமகளிர் மகாவித்தியாலயஅதிபர் அருட்சகோதரி தயாநாயகி செபமாலை ஆகியோர்கள் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொள்வார்கள்:

நிகழ்வில் வயதுமுதிர்ந்த முதியோர்கள் கௌரவிக்கப்படவுள்ளதுடன் முதியோர் தினப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்குப்பரிசில்கள் வழங்கல், கலை நிகழ்ச்சிகள் என்பன இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-75)

## ஆப்கான் மீதான

வருடா வருடம் உலகின்பல பாகங்களிலிருந்தும் மக்கள் அமெரிக்காவிற்குள்குடிபமர்த்தப்படுகின்றனர்.

அமெரிக்காவின் கருத்துப்படி 'நீ இலங்கை அல்லது இந்தியக் கலாசாரத்தைப் பின்பற்று. ஆனால்நீ அமெரிக்கப் பிரஜையாக இருக்கப் பழகிக்கொள' என்று கூறுவர். இப்படியான கருத்தை உடைய அமெரிக்கர்கள் பிரித்தானிய அரசிடம் இருந்து விடுதலை பெற்றவர்கள்.

முதலாம் உலக யுத்தகாலப் பகுதியில் ஜேர்மனிய நீர்மூழ்கிகளால் பயணிகள் கப்பல் தாக்கப்பட்ட போது ஜேர்மனிக் கெதிராக அமெரிக்கர் களத்தில் குதித்துப் போராடினார்கள் 2ம்உலகயுத்தகாலத்திலே உலகை ஜப்பான், ஜேர்மன், பிரித்தானியா, பிரான்ஸ் ரஷ்யா ஆகிய நாடுகள் ஏதோ ஒருவகையில் உலகைஆதிக்கம் செலுத்த முற்பட்டன.

அந்தஉலகயுத்தகாலத்திலே 20 மில்லியன் ரஷ்ய மக்கள் மாண்டனர்.

60 இலட்சம் யூதர்கள் ஹிட்லரால் கொல்லப்பட்டனர். ஒருவாறு இரண்டாம் உலக யுத்தம் முடிவுக்கு வந்தது.

### வல்லரசுகள் உருப்பெற்றன

இரண்டாம் உலகயுத்தம் முடிவுக்கு வந்ததும் இரண்டு வல்லரசுகள் உருப்பெற்றன. ஒன்றுரஷ்யாமற்றையதுஅமெரிக்கா. அமெரிக்கா தனது துணைக்கு ஐரோப்பிய நாடுகளை அமர்த்திக் கொண்டது அதுபோல் ரஷ்யா நாடு உக்ரெயின், ஹங்கேரி, உஸ்பெஸ்கிஸ்தான் கசகஸ்தான் போன்றநாடுகளைஇணைத்து ஒரு கூட்டரசை ஏற்படுத்தி சோவியத் யூனியன் என்று பெயர் பெற்றது.

1989ம் ஆண்டு சோவியத் யூனியன் உடைந்து 14 நாடுகளாகின. இதன் பின்னர் ரஷ்யா பலம் குறைந்தது.

இந்நிலையில் அமெரிக்கா சிறப்பான நிலையில்இருந்தது இவ்வாறான நிலைமையிலே முஸ்லிம்களின் அடிப்படை வாதம் தீவிரமாகியது. அரபு நாடுகளையும் முஸ்லிம் நாடுகளையும் அமெரிக்க முதலாளித்துவம் சுரண்டுவதாக எல்லா நாடுகளும் அமெரிக்காவைச் சாடின. இதிலிருந்து அமெரிக்காவிற்கும் அரபுநாடுகளுக்கும் கசப்புணர்வு ஏற்பட்டு அது தீவிரமானது.

இப்படியான காலகட்டத்திலே சதாம் ஹுசேன், கேணல்கடாபிபோன்றோரும் தோற்றம்பெறவேஇஸ்லாமிய அடிப்படை வாதியானசதாம் கொமேய்னி போன்றோரும் தோன்றினர்இவைஎல்லாவற்றுக்கும்முன்னர் மத்தியகிழக்கு நாடுகளின்பிரச்சினைக்குகாரணம் இஸ்ரேலை மறை முகமாகஅமெரிக்கா ஆதரித்தமையாகும் இதுஇவ்வாறுஇருக்க முஸ்லிம் அடிப்படை வாதம் மென் மேலும் வளர்ச்சி அடைந்தது.

### முஸ்லிம் பிரிவுகள்

உலகில் முஸ்லிம்கள் இரு பெரும் பிரிவுகளாக காணப்பட்டனர். அவை ஸியா, ஸுண்ணி ஆகிய இருபிரிவுகளாகும். இலங்கையில் உள்ளவர்கள் ஸுண்ணி முஸ்லிம் ஆகும். ஈரானில் ஸியா முஸ்லிம்கள் பெரும்பான்மையாகக் காணப்படுகின்றனர்.

இவற்றுக்கு இடையில் இஸ்ரேல் பலஸ்தீன பிரச்சினை உச்சக்கட்டத்தை அடைந்தது.

ஆப்கான் நிலைமையை நோக்கினால் ரஷ்யா ஆப்கானை பிடிப்பதன் மூலம் இந்து சமுத்திரத்தினை தனது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருக்கலாம் என்று எண்ணி ஆக்கிரமித்தது.

அதன் பின்னர் தலிபான் பேராளிகளின் கடும் தாக்குதல்களின் பின்னர் கடும் இழப்புடன் வெளியேறிச்சென்றது.

இன்று தலிபான் போராளிகளுடன் காணப்படும் ஒஸாமா பின்லேடனே அமெரிக்க நாட்டில் பென்டகன் மீதும் சர்வதேசவர்த்தகமையத்தின் மீதும் தாக்குதல்நடத்தப்பட்டதற்கு காரணம் ஆனவர் என்றுகுறிப்பிடப்படுகின்றது.

இவற்றின் தாக்கங்களை நாம் நோக்கினால் முதலாவதாக விமானப்பயணம் பெரும் சிரமங்களை எதிர் நோக்கி இருக்கின்றது: அதாவது பாதுகாப்பு அச்சுறுத்தல் தான் இதற்கு பிரதான காரணமாகும்.

அதற்கு அடுத்ததாக சுற்றுலாத்துறை வீழ்ச்சி அடையும் நிலை காணப்படுகின்றது இதனால் பாதிக்கப்படுவது மூன்றாம் நாடுகளான அபிவிருத்தி அடைந்து வருகின்ற நாடுகளே ஆகும். இலங்கையிலும் சுற்றுலாத்துறை இன்று மந்தமாகவே காணப்படுகின்றது.

அமெரிக்காவைச் சார்ந்துள்ள நாடுகளும் மிக மோசமான பொருளாதார நெருக்கடிக்குத் தள்ளப்படும் சாத்தியம் இருக்கின்றது.

அமெரிக்காவில் தற்போது ஜோர்ஜ்புஷ் ஆட்சியைக் கைப்பற்றி இருக்கிறார். எனவே அவரின் நடவடிக்கைகளை உலகம் மிக உன்னிப்பாக கண்காணித்துக் கொண்டுதான் இருக்கிறது. உலக நடைமுறையில் பில் கிளின்ரன் மிக முக்கியமான ஜனாதிபதியாவார். ஆனால் துரதிர்ஷ்டவசமாக அவரின் தனிப்பட்ட நடவடிக்கை காரணமாக உலகம் அதிருப்தி அடைந்தது.

ஐரோப்பிய நாடுகள் எல்லாம் தற்போது ஒரு இறுக்கமான பாதுகாப்பு முறையை கைக்கொண்டு இருக்கிறது. ஆ.2ம்உலக யுத்த காலப்பகுதியிலே அமுலில்இல்லாத அடையாள அட்டைநடைமுறைதற்போது அமுலுக்கு கொண்டு வரும் சாத்தியம் இருக்கிறது என்றுஅவர்மேலும் தெரிவித்தார். (க- 19-106)

### இன்று ஒரு தகவல்

## கரி வியாபாரம் செய்த ஏழையின் கதை

நந்தன் ஒரு ஏழைத் தொழிலாளி காட்டிற்குச் சென்று விறகுவெட்டி அதைக் கரியாக்கி நகரத்திற்குக் கொண்டு வந்து விற்பான். பேராசை என்பது அவனிடம் அணுவளவேனும் இல்லை. கிடைத்ததைக் கொண்டு திருப்திப்படுவான். இவனுடைய வாழ்க்கை முறையை அவ்வூர் அரசர் அவதானித்தார். அவனுடைய சாந்தம், பொறுமைக்காக அவனுக்கு வாழ்க்கையில் ஒரு திருப்பமையத்தை உண்டாக்க விரும்பினார்.

அரசர் தன்னுடைய சந்தனக் காடுகளில் ஒன்றை அவனுக்கு இனாமாகக் கொடுத்தார். அரசர் தன்மீது மனமிரங்கி அந்தக் காட்டை தனக்கு அளித்தது பற்றி அவன் மனம் மிகமகிழ்ந்தான். அவனுடைய மரம் வெட்டும் தொழிலும், கரியாக்குதலும், விற்பனை செய்தலும் வழக்கம் போல நடைபெற்று வந்தது. சந்தனக் கட்டைகள் எல்லாம்தீர்ந்துவிட்டன. ஒரேஒரு பெரிய மரம் மாத்திரம் எஞ்சி நின்றது. அரசருக்குத் திடீரென சந்தனக்காடு கொடுத்த ஏழையின் நினைவு வந்தது. அவனைத் தேடிச் சென்றார். பெரிய கோடீஸ்வரனாகியிருப்பான் என்று நினைத்துச் சென்ற அரசர், நந்தனைப் பழைய குடிசையிலேயே சந்தித்தார்.

இந்தக் காட்டிலுள்ள சந்தன மரங்களையெல்லாம் என்ன செய்தாய்? என்று அரசர் வினவினார். ஐயா நான் தினந்தோறும் ஒவ்வொரு சந்தன மரத்தை வெட்டிவீழ்த்தி அதனைக் கரியாக்கி ஒரு ரூபாவுக்கு விற்று வந்தேன் என்று கூறினான். அரசர் ஏழை ஆத்மாவே பெரும் குற்றம் செய்துவிட்டாய். அவையாவும் சாதாரண மரங்களல்ல. அது ஒவ்வொன்றும் விலையுயர்ந்த சந்தனமரம். சந்தனக்கட்டைகளாகவே கடைகளில் போய் விற்றிருந்தால் நீ ஒரு பெரிய கோடீஸ்வரனாகி இருக்க வேண்டும். இச்சமயத்தில் எஞ்சியுள்ள ஒரு சந்தன மரத்தின் கட்டைகளையாவது விற்பனை செய் மிச்ச திரவியம் கிடைக்கும் என்று புத்திமதி கூறினார். அவ்வண்ணமே அந்த ஒரு சந்தன மரத்தை வெட்டிக் கட்டைகளாக்கி விற்றதில் அவனுக்குப் பத்தாயிரம் ரூபாய் கிடைத்தது.

ஓ, மனிதா! இந்தத் தேகம் ஒரு சந்னக்காடு. தேகிதான் ஏழைக்கரிவிற்பனையாளன். அரசர் தான் பரமாத்மா. மூச்சுத் தான் சந்தனக் கட்டை. அறியாமையால் எப்படி அந்த ஏழை சந்தனக் கட்டையைக் கரியாக்கி விற்றுத் தொலைத்தானோ, அப்படியே அஞ்ஞானத்தினால் இந்திரிய சுகங்களில் நீயும் மூச்சுக் காற்றை வீணாக்குகிறாய், (மூச்சுக் காற்றுத்தான்- சுவாசம், பிராணன்) நீயும் கூடப் பெருங் குற்றம் பண்ணுகிறாய் தினந்தோறும் உனது வாழ்க்கை வீணாகக் கழிந்து போகிறது. இவ் வாழ்க்கை கடவுளைச் சாட்சாத்கரிப்பதற்காகவே ஏற்பட்டது.

பிராணன் மிக விலையுயர்ந்தது. காலமோ மிக மிகவிலையுயர்ந்தது ஜபம், தியானம், சங்கீர்த்தனம், மந்திரம் எழுதல், நிஷ்காம்ய சேவை, ஆத்மீக நூல்களைப் பாராயணம் செய்தல் இவை போன்ற ஆத்மசாதனைகளிலே ஒவ்வொரு நொடிப் பொழுதையும் நீ பிரயோசனப் படுத்த வேண்டும், சாப்பிடுவதிலும், வீண் பேச்சுகளிலும், இந்திரிய சுகங்களிலும் உனது காலத்தைப் பாழாக்குகிறாய்.

மரண தேவனின் முரட்டுப் பிடியில் உழலும் போது, அழுதழுது பச்சாதாபப் படுவதில என்ன பயன்? மூலப் பரம் பொருளை ஒவ்வொரு மூச்சின் போதும் ஞாபகப்படுத்திக் கொள்ளுங்கள். ஒருவன்மரண வாயிலிருக்கும் போது பெற்றோர்கள மருத்துவரிடம். ''அன்புள்ள ஐயாவே, ஊசி மருந்துகளினாலும், உத்தீபனம ஊட்டும் மருந்துகளினாலும் என் மகனின் உயிரை இன்னும் சிறிது காலத்திற்காவது நீடிக்கச் செய்யுங்கள். காலைப் புகை வண்டியில் பம்பாயிலிருந்து வருகிற எனது மகனை எதிர் பார்க்கிறேன். எனது மகனைப் பார்க்கவேண்டும் என்ற பேராவல் அவருக்கு தயவு பண்ணுங்கள் என்று கெஞ்சிக் கதறுகிறார்கள். மருத்துவ நிபுணர்களாலும் கூட ஒரு நிமிடமேனும் உயிரை நீடிக்கச் செய்ய முடியாது. இப்பொழுது தான் மக்கள் காலத்தின் அருமை, பெருமையை உணர்ந்து கொள்கிறார்கள். சூதாட்டங்களிலும், குடி போதைகளிலும் சினிமாப் படங்களிலும் சீட்டாட்டங்களிலும், குதிரைப் பந்தயங்களிலும், ஸ்திரி போகங்களிலும் காலத்தை மக்கள் வீணாக்குகிறார்கள், என்ன பரிதாபமான நிலை?

விலை மதிக்கவொண்ணாத இவ் வாழ்க்கையை வியர்த்தமாக்கிக் கரியாக்கி விட்டாய். பல்லாண்டுகள் பாழாகின. இப்போதாவது கண் விழித்துக் கொள். □

ஆத்மஜோதி நா.முத்தையா

# அடிப்படை வசதிகளற்ற நிலையில் தென்மராட்சிப் பாடசாலைகள்

### அமைச்சருடனான கலந்துரையாடலில் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சிப் பகுதியில் பல பாடசாலைகள் அடிப்படை வசதிகள் எதுவுமற்ற நிலையில் உள்ளன. மிகவும் கஷ்டத்தின் மத்தியிலே தான் கற்பித்தல் நடவடிக்கையை முன்னெடுக்க முடிகிறது.

தென்மராட்சிப் பகுதிப் பாடசாலைகள் நிலைவரம் குறித்து அப்பகுதிப் பாடசாலை அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் அண்மையில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுடன் நடத்திய கலந்துரையாடலில் மேற் கண்டவாறு தெரிவித்தனர்.

200 ற்கும் மேற்பட்ட கல்விசார் ஊழியர்களும், பொது மக்களும் கலந்து கொண்ட அக்கலந்துரையாடலில் அவர்கள் மேலும் தெரிவிக்கையில்;

இப் பகுதியில் இயங்கும் பாடசாலைகள் பல முற்றாக சேதமடைந்த நிலையிலேயே காணப்படுகின்றன. எஞ்சியுள்ள பாடசாலைகள் மிகவும் மோசமாகப் பாதிப்படைந்துள்ளன. இவற்றில் பலவற்றில் கூரைத்தகடுகள் எதுவும் இல்லை.

கதவுகள், பாடசாலை வேலிகள், மதில்கள், மலசல கூடங்கள் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன. எனச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளதுடன். இயங்கும் பாடசாலைகளில் கிணறுகளும் பழுதடைந்துள்ளன.

மேலும் சில பாடசாலையின் அருகில் இராணுவ செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுவதால் மாணவர்கள் பாதிக்கப்படுவதாக பாடசாலைஅதிபர் ஒருவரினால் சுட்டிக்காட்டப்பட்டது.

இச் செயற்பாட்டை நிறுத்தினால் மட்டுமே பாடசாலைகளில் மாணவர்களுக்கு சிறந்த முறையில் கல்வியைப் போதிக்க முடியும் எனவும் கருத்துத் தெரிவிக்கப்பட்டது.

முன்பு இருந்ததை விட இப்போது பாடசாலைகளில் மாணவர்களின் வரவு அதிகரித்துள்ளது.

குறிப்பாக மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயத்தில் முதலில் 66 மாணவர்களுடன் இயங்கிய பாடசாலை இப்போது 166 மாணவர்களுடன் இயங்குகின்றது எதிர்காலத்தில் இவ் வரவு மேலும் அதிகரிக்கலாம். எனவே இதற்கு தடங்கலாக உள்ள தடைகளை அகற்றுவது மிகவும் முக்கிய கடமை இவ்வாறு அதிபர்கள் ஆசிரியர் தென்மராட்சி கல்விச் சூழ்நிலை குறித்து அமைச்சருக்கு எடுத்து விளக்கினர். இதற்கு உரிய நடவடிக்கை எடுப்பதாக அமைச்சர் உறுதி கூறியுள்ளார். இதற்கான கலந்துரையாடல் எதிர் வரும் வியாழக்கிழமை அமைச்சு அலுவலகத்தில் இடம் பெறவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (க-10

## தமிழ்த்தின விழாவும் நிறுவுநர் தினமும்

(கல்வியங்காடு)

நல்லூர் செங்குந்தா இந்துக் கல்லூரியின் தமிழ்த்தினவிழாவும் நிறுவுநர் தினமும் இன்று மு.ப. 9 30 மணிக்கு தமிழ் மன்றத்தலைவர் மு.இராசகுமார் தலைமையில் நடைபெறவுள்ளது. (செ-208)

## ஏழாலையில் சிறுவர் தின விழா

(யாழ்ப்பாணம்)

ஏழாலை மேற்கில் அமைந்துள்ள கைதடி சைவச் சிறுவர் இல்லத்தில் இன்று 1ஆந்திகதி பிற்பகல் 3 00 மணியளவில் சிறுவர் தின விழாஇடம்பெற உள்ளது.

அருட்கவி சீ விநாசித்தம்பிதலைமையில்நடைபெறவுள்ள மேற்படிநிகழ்வில் சிறுவர் உரையரங்கு சிறுவர் கலை நிகழ்ச்சி பேராசிரியர் நா ஞானக்குமார்இந்து சமயப் பேரவைசெயலர் வ.சக்திகிரீவன் ஆகியோரின்உரைகளும் இடம் பெற உள்ளது. (க)

★ ★ ★ ★ ★

(யாழ்ப்பாணம்)

யாழ். கரவெட்டி ஸ்ரீ நாரதர் வித்தியாலய மண்டபத்தில் சிறுவர் திறனை வளர்க்கும் முகமாக கலை விழா ஒன்று அண்மையில் இடம் பெற்றது.

கியூடெக் இயக்குநர் அருட்திரு ஜ. ஜெயக்குமார் அடிகளார் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராகக்கலந்து கொண்டார்.

இதேவேளை கியூடெக் நிறுவனத்தின் ஏற்பாட்டில் கரவெட்டி மேற்குப் பகுதியில் சிறுவர்களுக்கான மாலை நேர இலவச வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (க-229)

## கவிதை நூல் வெளியீடு

(ஈச்சமோட்டை)

கவிஞர்சோ.பத்மநாதனின் 'ஆபிரிக்க கவிதைகள்' என்னும் நூல் வெளியீட்டு விழா நாளை செவ்வாய்க் கிழமை மு.ப9 30மணிக்கு யாழ் பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

பண்டிதர் க.சச்சிதானந்தன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் நூல் ஆய்வுரையை பேராசிரியர் அ சண்முகதாஸ், சிற்பி சி.சிவசரவணபவன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். (செ-59,217)

## நிவாரணப் பொருட்கள் தரமற்றதாக இருப்பின் கொள்வனவு செய்ய வேண்டாம்

### அமைச்சர் டக்ளஸ் வேண்டு கோள்

(யாழ்ப்பாணம்)

அரசினால் இலவசமாக வழங்கப்படும் நிவாரணப் பொருட்கள் தரம் குறைவாக இருப்பின் அவற்றைக் கொள்வனவு செய்ய வேண்டாம்.

இவ்வாறு அமைச்சர் டக்ளஸ்தேவானந்தா பொதுமக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இவ்வாறான குறைபாடு இருப்பின் உடனடியாக தகுந்த அதிகாரிகளுக்கு அறிவிக்கும்படியும் அல்லது தம்முடன் தொடர்பு கொள்ளுமாறும் அவர் தமது வேண்டுகோளில் மேலும் தெரிவித்துள்ளார். (க-10)

## கிணறுகள் துப்புரவாக்கல் தென்மராட்சியில் துரிதம்

(மீசாலை)

தென்மராட்சியில் மீளக் குடியமருவோருக்கென கிணறுகளை துப்புரவாக்கும் பணிகள் துரிதகதியில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

சுமார் 35 கிணறுகள் இவ்வாறு துப்புரவாக்கப்பட்டு பொது மக்கள் நீரைப் பயன்படுத்துவதற்கு ஏற்ற வகையில் தயார் செய்யப்பட்டுள்ளன.

சாவகச்சேரி நகரசபையினர் மேற்கொண்ட இம் முயற்சியினால் தென்மராட்சியில் மீளக் குடியமர்வோர் பெரிதும் நன்மை அடைந்துள்ளனர்.

இதற்கென மீசாலையில் ஒரு கிளை அலுவலகம் செயற்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது. (க-22)

# யாழ். நவீன சந்தை திருத்த வேலைக்கான நிதி இதுவரையில் எமக்குக் கிடைக்கவில்லை

### யாழ். மாநகர முதல்வர் ஆதங்கம்

(யாழ்ப்பாணம்)

யாழ். நவீன சந்தையின் இறுதிக் கட்டடத் திருத்த வேலைக்கென 10 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்து தருவதாக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. ஆனால் இன்று வரை ஒரு சதம் கூட யாழ்.மாநகர சபைக்கு வழங்கப்படவில்லை.

இவ்வாறு யாழ். மாநகர சபை முதல்வர் ந.ரவிராஜ் யாழ்.மாநகர அலுவலகத்தில் அண்மையில்நடைபெற்றசபையின் மாதாந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போது தெரிவித்தார்.

இது விடயம் தொடர்பாக அவர் மேலும் பேசுகையில்;

யாழ். மாநகர சபையின் வேலைத் திட்டம் தொடர்பாக வடக்கு-கிழக்கு மாகாண ஆளுநர் அசோகா ஜெயவர்த்தனவிடம் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. ஆனால் நடவடிக்கை எதுவும் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

இந் நிலையில் இவ் வருடம் முடிவடைவதற்கு சில மாதங்கள் இருக்கும் நிலையில் அரசினால் நிதி ஒதுக்கப்பட்டு குறிப்பிட்ட கால எல்லைக்குள் வேலைத்திட்டத்தை நிறைவேற்றும்படி அரசு பணிப்புரை விடுக்கலாம்.

கடந்த வருடமும் அரசு இவ்வாறு தான் நடந்து கொண்டது. ஆனால் நாம் கடும் முயற்சியின் பயனாக முழு நிதியையும் பயன்படுத்தினோம் இல்லாவிடின் நிதி திறைசேரிக்குத் திரும்பிவிடும். இதனை அரசு ஒருபிரசார தந்திரமாகப் பயன்படுத்தக் கூடும்.

யாழ்.மாவட்டத்தைப் பொறுத்தவரையில் 17 உள்ளூராட்சி சபைகள் செயற்பட்டு வருகின்றன இவற்றுள் 02 சபைகள் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமையிலும் ஏனைய 15 சபைகள் ரெலோ, புளொட் ஈ.பி.டி.பி. ஆகியவற்றின் தலைமையிலும் செயற்பட்டு வருகின்றன என்று குறிப்பிட்டார்.

நிதி ஒதுக்கீடு விடயத்தில் அரசு பாரபட்சம் காட்டி வருவதும் குறித்து முதல்வர் தனது உரையில் வருத்தம் தெரிவித்தார்.

மேலும் அவர் பேசுகையில் கூறியதாவது;

யாழ்.மாநகர சபைக்கு கிடைத்த நிதியைக் கொண்டு சந்தைகள் புனரமைப்பு, பூங்காக்கள் அமைப்பு போன்ற செயல் திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

யாழ்.பொது நூலக புனரமைப்புப் பணிகள் பூர்த்தியடையும் நிலையில் உள்ளன.

(08ஆம் பக்கம் பார்க்க)

### சிந்தனைக்கு விருந்து

#### தடுத்துரைக்க அஞ்சுவர்

''டேற்றிங்'' எனக்கேட்டு டோட்டர் மிரட்டுகிறாள்
வேற்றுப்பண் பாட்டினிலே வீழ்ந்தவளை - ஆற்றுப்
படுத்தவழி காணாப் பரிதவிக்கும் பெற்றோர்
தடுததுரைக்க அஞ்சுவரே தாம்

'பழையவன்'

# யாழ். வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய
# தேர்ச் சிறப்பு மலர் - 2001

இன்று தேர் உலா வரும் வல்லிபுர ஆழ்வாரின்
அருள்வேண்டி நிற்கின்றோம்.

## ஸ்ரீ கிருஸ்ணா கிறீம் ஹவுஸ்

கொடிகாமம் வீதி, நெல்லியடி.

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வாரின் அருள்கிடைக்க வணங்கி
நிற்கின்றோம் !

## செல்வமுத்தூஸ் புடைவை மாளிகை

பிரதான வீதி, நெல்லியடி.

வாடிக்கையாளர்கள், ஆதரவாளர்கள், அன்பர்கள் அனைவரும்
ஸ்ரீ வல்லிபுர ஆழ்வாரின் அருள்பெற வேண்டுகின்றோம்!

## கட்டைவேலி நெல்லியடி ★
## ★ ப. நோ. கூ. சங்கம்

தலைவரும்,
கரவெட்டி. பணியாளர்களும்.

இன்று தேரேறும் வல்லிபுர ஆழ்வாரின் அருள் அனைவரும்
பெற்றிட வேண்டி நிற்கின்றோம்!

★

## பருத்தித்துறை ப. நோ. கூ. சங்கம்

தம்பசிட்டி வீதி, தலைவரும்,
பருத்தித்துறை. பணியாளர்களும்.

வல்லிபுர ஆழ்வாரின் அருள் வேண்டி நிற்கின்றோம்!

## லவ்லி கூல்பார் சுபாஸ் வெதுப்பகம்

பிரதான வீதி, நெல்லியடி.

அனைவருக்கும் ஸ்ரீ வல்லிபுர ஆழ்வாரின் அருள்வேண்டி நிற்கின்றோம் !

## ஜெயா நகை மாடம்

பருத்தித்துறை வீதி, நெல்லியடி.

### தேரேறிவா

கண்ணா எமையாளும் மன்னா! மணி
வண்ணா! மண்ணில் நாம் படும்
துன்பங்கள் யாவும் தீர்க்க
இன்முகத்துடன் தேரேறிவா!

வதிரியூர் தர்மராஜா அஜந்தகுமார்

மலராக்கம்
சந்திரமோகன் - திருநீபன்

தேரேறும் மாயவனின் அருள் வேண்டி
நிற்கின்றோம்!

## கோபா

சர்வதேச தொலைத் தொடர்பு சேவை

சந்தை முன்பாக
புலோலி மந்திகை.
T. P. 070-212372
E-Mail-Manohar @ Sitnet IK

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வாரின் அருள்வேண்டி
நிற்கின்றோம்!

★

## சிதம்பரப்பிள்ளை புத்தகசாலை

பிரதான வீதி, நெல்லியடி,
கரவெட்டி.

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வாரின் அருள் அனைவரும்
பெற்றிட வேண்டி நிற்கின்றோம்!

## நாவலர் புத்தகசாலை

சிலையடி; மந்திகை, புலோலி.

திருமாலின் அருள் அனைவருக்கும் கிடைக்க
வணங்கி நிற்கின்றோம்!

## பிரசாந்த்

தொலைத் தொடர்பு நிலையம்

T. P. 070 - 213014 குரும்பசிட்டி,
புலோலி வடமேற்கு.

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள், அனைவருக்கும் ஸ்ரீ வல்லிபுர நாதனின்
அருள்வேண்டி நிற்கின்றோம்!

## திக்கம் வடிசாலை

அல்வாய் மேற்கு, பொது முகாமையாளரும்,
அல்வாய். பணியாளர்களும்.

# ஏ- 09 கண்டி வீதிப்பாவனை

# உடனடிச் சாத்தியம் இல்லை

## படை அதிகாரி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம் )

யாழ்ப்பாணத்திலிருந்து கச்சேரி ஊடாகத் தென்மராட்சி செல்லும்ஏ-09 கண்டி வீதிப் பாதை உடனடியாக திறக்கும் சாத்தியம் இல்லையென தென்மராட்சிபடைத் தளபதி தெரிவித்துள்ளார்.

ஈ.பி.டி.பி செயலகத்தில் அண்மையில் இடம்பெயர்ந்த தென்மராட்சி மக்களை மீளக்குடியமர்தல் தொடர்பான கலந்துரையாடலில் பங்கு பற்றிய மக்களிடம் படையதிகாரி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில்; அவ்வீதிப் பகுதியில் ஏராளமான மிதிவெடிகளும், பொறி வெடிகளும் புதைககப்பட்டுள்ளன. அவை அகற்றிய பின்னரே அப் பாதையின் ஊடாக போக்குவரத்து சேவையினை நடத்தமுடியும். கோப்பாய் ஊடான பாதையையே தென்மராட்சிப் போக்குவரத்திற்கு பயன்படுத்துமாறு அவர் கூறினார்.

அத்துடன் இப் பாதையூடான போக்குவரத்தில் ஏற்பட்டுள்ள இடர்ப்பாடுகளையும் கஷ்டங்களையும் இயன்றவரை படைத்தரப்பு குறைக்க நடவடிக்கை, எடுக்கும் எனவும் தெரிவித்தார்;

மேலும் அண்மையில் கைதடிபகுதியில் ஏற்பட்ட இராணுவ நடவடிக்கையால் சேதமடைந்துள்ள வீதிகளையும், பாலங்களையும் திருத்துவதற்கு வீதிப் போக்குவரத்து சபை உடன் நடவடிக்கை எடுக்கும் என சம்பந்தப்பட்ட அதிகாரி தெரிவித்துள்ளார்;

மீசாலையிலுள்ள புத்தூர்ச் சந்திப் பகுதியிலிருந்து கனகம் புளியடிச் சந்தி ஊடாகச் செல்லும் பாதையில் இராணுவத்தினரின் பாரிய இராணுவ முகாம் உள்ளதால்இப் பாதை பொது மக்களின் பாவனைக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது என்றும் மக்கள் அப்பாதையால்போக்குவரத்து செய்ய அனுமதி வழங்கப்பட வேண்டும என்றும் சமுகமளித்திருந்த பலர் கேட்டுக்கொண்டனர். இதனை ஏற்றுக் கொண்ட படையதிகாரி தங்கள் உயர் அதிகாரிகளுடன் கலந்துரையாடி முடிவு எடுப்பதாகக் கூறியுள்ளனர்.

(க-10)

## தென்மராட்சிப் பகுதியில், மரங்கள் தறிப்பதற்கு அரச அதிபர் தடைவிதிப்பு

(தென்மராட்சி)

தென்மராட்சிப் பிரதேசத்தில் கண்டபடி மரங்கள் தறிக்கப்படுவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் அப்பகுதியில் யாழ்ப்பாணம் அரச அதிபரின் அனுமதியின்றி இனி மேல் மரங்கள் வெட்டப்படக் கூடாது என உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இப்பகுதியில் மரங்கள்கண்டபடி வெட்டப்படுவது பற்றியும் சுற்றுச்சூழல் பாதிப்படைவது பற்றியும சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் வடக்கின் அபிவிருத்தி புனர்வாழ்வு · புனரமைச்சு அமைச்சர்களின் கவனத்துக்குக் கொண்டு வந்ததன் பேரிலேயே இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக அறியப்படுகிறது.

அரச அதிபரின் அனுமதியின்றி வெட்டப்படும் மரங்கள் மரக்கூட்டுத்தாபன அதிகாரிகளால் பறிமுதல் செய்யப்பட்டு பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(உ-10-77)

## தமிழகத்தவர் ஒருவருக்கு இம்முறை கலாநிதிப்பட்டம்

### யாழ்.பல்கலைக்கழகம் வழங்குகிறது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் இம் மாதம் 06 ஆம் திகதி இடம்பெறவுள்ள பட்டமளிப்பு விழா வில் தமிழகத்தை சேர்ந்த கல்வியாளர் ஒருவருக்கு கௌரவ இலக்கிய கலாநிதிப் பட்டம் வழங்கப்பட உள்ளது;

சென்னை உயர் நீதிமன்ற நீதியரசரும்,சைவசித்தாந்தப் பேரறிஞரும்,சிறந்த மொழி பெயர்ப்பாளருமாகிய த.இராமச்சந்திரனுக்கே இப் பட்டம் வழங்கபபட உள்ளது.

தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் சிறந்த பேச்சு வன்மை படைத்த இவர் சேக்கிழார் பெருமானை அடியொற்றி தம் வாழ்வை நடத்துபவர் என்பது குறிப்பிடத்தக்கது.

(க-202)

## இல. பரீட்சைத் திணைக்களத்தின் பொன்விழா நிகழ்வுஇன்று

(யாழ்ப்பாணம)

இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் பொன் விழா இன்று கல்வி உயர் கல்வி அமைச்சரின் தலைமையில் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தில் நடை பெறவுள்ளது.

இப் பொன்விழாவை முன்னிட்டு பரீட்சைகள் தொடர்பான நூதன சாலை ஒன்று திறநது வைக்கப்படவுள்ளது;

தகவல் தொழில் நுட்பப் பிரிவொன்றும் ஆரமபித்து வைக்கப்படவுள்ளது,

இன்று ஆரம்பிக்கப்படும் புதிய வெப் தளம் மூலம் முதன்முதலாக 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகள் வெளியிடப்படும.

(க-03)

## தென்மராட்சி வலயத்தில் மாணவர்கள் 67 பேர் புலமைப்பரிசிலுக்கு தெரிவு

(மந்திகை)

தென்மராட்சி கல்வி வலயத்தில் 10 பாடசாலைகளைச் சேர்ந்த தரம் 6-11 வரை கற்கும் 67 மாணவர்கள் விசேட புலமைப் பரிசில் திட்டத்தின் கீழ் புலமைப்பரிசில் பெறத் தகுதியுடையவர்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர் என வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா தெரிவித்துள்ளார்.

சாவகச்சேரி இந்துக்கல்லூரி, டிறிபேக் கல்லூரி, வரணி மகா வித்தியாலயம், மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம், மட்டுவில் சந்திரோதய ஸ்கந்தவரோதயக் கல்லூரி, சாவகச்சேரி மகளிர் கல்லூரி, கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயம், உசன் இராமநாதன் கல்லூரி, பளை மத்தியகல்லூரி, மீசாலை விக்னேஸ்வராக் கல்லூரி ஆகிய பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்களே இவ்வாறு தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

மேற்படி பாடசாலை அதிபர்களை வலயநிதிப்பிரிவுடன் தொடர்பு கொண்டு மாணவர்களுக்கான காசோலைகளைப்பெற்றுக் கொள்ளுமாறும் தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (செ-23)

## தங்கச் சங்கிலி திருட்டு

(கல்வயல்)

இரவு நேரம் வீட்டார் நித்திரையிலிருந்த சமயம் ஜன்னல் கம்பிகளை வளைதது உள் நுழைந்த திருடன் அவ் வீட்டுப் பெண் அணிந்திருந்த தங்கச் சங்கிலியை திருடிச் சென்றுள்ளான்.

இச் சம்பவம் கடந்த 25-ஆம் திகதி பருத்தித்துறை விநாயக முதலியார் வீதியிலுள்ள வீடொன்றில் நடைபெற்றுள்ளது. (செ-111)

## பாவனையாளர் சங்கம் புனரமைப்பு

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாண ஜெய்ப்பூர் அவயவ நிறுவன பாவனையாளர் சங்க புனரமைப்புக் கூட்டம் அண்மையில் இணுவில் வைத்தியசாலையிலுளள மேற்படி சங்கத்தின் தற்காலிக பணிமனையில் நடைபெற்றது.

300 ற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்ட இந்நிகழ்வில் தலைவராக சட்டத்தரணி வே. நடராசாவும், செயலாளராக ந.சுதர்சனும், பொருளாளராக ஜோண்சனும் தெரிவு செய்யப்பட்டனர்.

மேற்படி சங்கத்தில் அங்கத்தவராக சேர விரும்புவோர் பின்வரும் முகவரிகளுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்,

தலைவர் வே, நடராசா (சட்டத்தரணி), ந. சுதர்சன், 3 நவீன சந்தை மேல்மாடி, யாழ்ப்பாணம்; பொருளாளர் ஜோண்சன் ஜெய்ப்பூர் நிறுவனம் இணுவில் வைத்தியசாலை. இ. சிவநாதன் 'வசந்தம் பார்மசி' 456. ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம்.

பயனாளிகள் சுயமுயற்சிக் கடன் பெறல், தொழில் வாய்ப்பிற்கு முன்னுரிமை வழங்கல் போன்ற முன்னேற்றகரமான நடவடிக்கைகளை மேற்படி ஜெய்பூர் நிறுவனம் மேற்கொண்டு வருவதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

(க)

# செய்தித் துளிகள்

## குப்பி விளக்கினால் தீவிபத்து

(மந்திகை)

குப்பிவிளக்கின் உதவியுடன் மோட்டார் சைக்கிளில் எரிபொருள் பார்த்தவேளை ஏற்பட்ட தீவிபத்தில் எரிகாயங்களுக்குள்ளானவர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்;

அண்மையில் உடுப்பிட்டிப் பகுதியில் நடைபெற்ற இச் சம்பவத்தில் எஸ். அல்வின் (வயது 30) என்பவரே இவ் வாறுமுகத்தில் எரிகாயங்களுக்குள்ளானவராவார்.

(செ-23)

## பழுதடைந்த அப்பிள்கள் அழிப்பு

(கல்வியங்காடு)

குருநகர் சந்தையில் விற்பனைக்காகவைக்கப்பட்டிருந்த பழுதடைந்த அப்பிள்கள் சந்தை மேற்பார்வையாளரால் இனங்காணப்பட்டுபொதுச் சுகாதாரப் பரிசோதகரால்கடந்த வியாழக்கிழமை அழிக்கப்பட்டன.

(செ-208)

## பன்னிரு திருமுறைப் பாராயணம்

(யாழ்ப்பாணம்)

அகிலஇலங்கைத் திருமுறை மன்றம்மாதாந்தபௌர்ணமி தினத்தில் நடத்தி வரும் அகத்தியர் தேவாரத்திரட்டு முற்றோதலும், பன்னிரு திருமுறைப்பாராயணமும்நாளை செவ்வாய்க்கிழமை காலை 7.00மணிக்கு நல்லூர் ஸ்ரீ காமாட்சி அம்பாள் மடாலயத்தில்நடை பெறவுள்ளது;

அன்றைய தினம் மழை வேண்டல் பதிகப்பாராயணமும் நிறைவு பெறும்.

(செ)

## பெண்கள் மலசலகூடம் பழுது

(கல்வியங்காடு)

குருநகர் சந்தையில் பெண்களுக்கான பொது மலசலகூடம் நீண்டகாலமாக பழுதடைந்து காணப்படுகின்றது.

இதனால் பெண் வியாபாரிகள் பெருஞ் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(செ-208)

## பாடசாலை இடமாற்றம்

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயம் தற்போது கொட்டடி நமசிவாய வித்தியாலயத்தில் இயங்கிவருகிறது.

கடந்த ஆண்டு வைகாசியில்ஏற்பட்ட இடப்பெயர்வின் பின் நவாலியில் இயங்கி வந்த இப்பாடசாலை தற்போது கொட்டடியில் இயங்கி வருகின்றது. (செ-223)

## சிறுவர்தின நிகழ்வு

(மந்திகை)

பளைபிரதேசசெயலகத்தின் சர்வதேச சிறுவர்தினநிகழ்வு எதிர்வரும் 8ஆம்திகதிபுலோலியில் இயங்கும் அலுவலகத்தில் பிரதேசசெயலர் சு.புத்திசிகாமணி தலைமையில் நடைபெறவுள்ளது.

(செ-23)

## நூலகம் திறப்பு

[யாழ்ப்பாணம்]

அடுத்த வருடம் ஜனவரி மாதம் 14 ஆம் திகதி யாழ்ப்பாணம் பொது சன நூலகம் திறந்து வைக்கப்படவுள்ளது.

இதற்கான நடவடிக்கைகள் துரிதமாக முன்னெடுக்கப்பட்டு வருவதாக நேற்று முன்தினம் நடைபெற்ற மாநகரசபைக் கூட்டத்தில் மேயர் ந. இரவிராஜ் தெரிவித்தார். [உ-106-19]

## கலாசார விழா

(மானிப்பாய்)

வலிகாமம் தென் மேற்கு பிரதேச செயலகத்தின் கலாசார விழா எதிர் வரும் ஒக்ரோபர் மாதம் 6ம், 7ம் திகதிகளில் மானிப்பாய்ப் பிரதேச சபை கலாசார மண்டபத்தில் இடம் பெறவுள்ளன.

இந் நிகழ்வுகள் கலாசாரப் பேரவைத் தலைவரும், பிரதேச செயலருமான நா. வேதநாயகன் தலைமையில் நடைபெறவுள்ளன;

(எ-232)

## பரிசளிப்பு விழா

(கோப்பாய்)

உரும்பிராய் சந்திரோதய வித்தியாசாலையின்பரிசளிப்பு விழா நளை மறுதினம் புதன் கிழமை பி.ப.2.00 மணிக்கு அதிபர் க. ஆனந்தராஜா தலைமையில் நடைபெறவுள்ளது; (செ)

## கிளைக்குழு தேர்வு

(மந்திகை)

கட்டைவேலி நெல்லியடி பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் கிளைக்குழுத் தேர்தல் எதிர் வரும் 7 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சங்கக் கிளைகளில் நடைபெறவுள்ளன. (செ-23)

## கடையிற் சுவாமிகள் குருபூசை

(நீராவியடி)

ஈழத்து முதற் சித்தர் கடையிற் சுவாமிகளின் நூற்றிப் பத்தாவது குருபூசை இன்று திங்கட்கிழமை நீராவியடியில் அமைந்துள்ள கடையிற் சுவாமி ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

(செ- 202)

## சிறுவர் முதியோர் தின விழா

(யாழ்ப்பாணம)

தென்மராட்சிப் பிரதேச செயலகம் நடத்தும் சர்வதேச சிறுவர்- முதியோர் தினவிழா இன்றுபி.பகல் 2. 00 மணிக்கு பிரதேச செயலர் பு. சுந்தரம்பிள்ளை தலைமையில் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (செ- 9)

## சுகவாழ்வு

எச்: ஐ. வி. கிருமிகளோ/ எயிட்ஸ் நோய்க்கான அறிகுறிகளோ இருப்பதாக நீங்கள் கருதினால் உடனே பாலியல் நோய்த் தடுப்பு நிலையமொன்றில் உங்கள் இரத்தத்தைப் பரிசோதிக்கவும். இவ் விரத்தப் பரிசோதனை முற்றிலும் இலவசமானதே! (எயிட்ஸ் வருமுன் காப்போம்!)

தரிசனம்

## வலி வடக்கு மக்களுக்கு

# வழி காட்டத் தவறிய அரசு; தென்மராட்சி மக்களை அவசரமாக குடியமர்த்துவது ஏன்?

### கபட நாடகம் என்கிறார் அன்ரன் பொன்னையா

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வடக்கு மக்கள் இடம்பெயர்ந்து கடந்த 11 வருடங்களாக அலைந்து திரிகின்றனர். அவர்களை மீளக் குடியேற்றுவது தொடர்பான உருப்படியான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை;

இந்த நிலையில் கடந்த வருடம் இடம்பெயர்ந்த தென்மராட்சிப் பகுதி மக்களை மீளக் குடியமர்த்துவதில் காட்டப்படும் அக்கறை பல வேறு சந்தேகங்களை எமக்குத் தோற்றுவிக்கிறது.

நேற்று முன்தினம் யாழ். ஈ.பி.டி.பி. அலுவலகத்தில் தென்மராட்சிப் பகுதி மக்களை மீளக் குடியமர்த்துவது தொடர்பாகவும், அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் இடம் பெற்ற கலந்துரையாடலில் சாவகச்சேரி பிரதேச சபைத் தலைவர் அன்ரன் பொன்னையா இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்;

அரசின் அவசர மீள் குடியமர்த்தல் நடவடிக்கையானது பொதுமக்களை அவர்கள் மனிதக் கேடயங்களாகப் பயன்படுத்துவதற்கான முன் நடவடிக்கை என்றே உணர முடிகிறது.

இப்பகுதியில் மக்கள் மீளக் குடியமர்ந்த பின்னர் 78 ற்கும் மேற்பட்ட வெடிவிபத்துகள் இடம்பெற்றுள்ளன:

இதனால்பலர்தமது அவயவங்களை இழந்தும் இறந்தும் வருகின்றனர்என்று குறிப்பிட்டார்.

இதற்குப் பதிலளிக்கும் வகையில் தென்மராட்சி ஈ.பி.டி.பி. அமைப்பாளர் உரையாற்றுகையில்:

இது வெறும் கற்பனைக் கதையென்றும், பொதுமக்களின் வலியுறுத்தல்கள், ஊர்வலங்கள், ஆர்ப்பாட்டங்களின் மத்தியிலேயே தாம்அவர்களைக் குடியேற்றி வருவதாகவும், அவர்கள் உயிர்களையோ அவயங்களையோ இழந்து தவிப்பது தமக்கு உடன்பாடானதல்ல எனவும் கூறினார்: [உ-10]

## செய்தித் துளிகள்

### திருடர் தொல்லை அதிகரிப்பு

[வல்வெட்டித்துறை]

வடமராட்சியில்உடுப்பிட்டி, வல்வெட்டி, கம்பர்மலை, வல்வெட்டித்துறை ஆகிய பகுதிகளில் திருடர்களின் தொல்லை அதிகரித்து வருவதாக அப்பகுதி மக்கள் அதிருப்திதெரிவித்துள்ளனர்.

ஊரடங்கு வேளைகளில் கறுபுகாற்சட்டை ரீசேட் அணிந்து கைகளில் ஆயுதங்களுடன் கள்வர் நடமாடித்திரிவதாகவும் கூறியுள்ளனர்.

(உ-217)

### வெள்ளநீர் தேக்கம்

(வரணி)

பருத்தித்துறை கொடிகாம வீதியில் அமைந்துள்ள பிரதான பாலத்தினைத் திருத்துவதற்கு வேண்டிய நிதி ஒதுக்கீடுசெய்யப்பட்ட போதிலும் மேற்படி பாலம் திருத்தப்படாமையினால் அப்பகுதி வயல் நிலங்கள் மற்றும்காணிகளில் வெள்ளநீர் தேங்குவதாகப் புகார் தெரிவிக்கப்படுகிறது.

இதுவிடயம் தொடர்பாக சம்பந்தப்பட்டவர்களின் கவனத்தின்கீழ் கொண்டு வரப்பட்ட போதிலும் உருப்படியான நடவடிக்கைகள் ஏதும் எடுக்கப்படவில்லை எனவும் அப்பகுதி மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

(உ-211)

### தங்குமிட அறைகள் திறப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபைஉறுப்பினர்கள் தங்குமிட அறைகள் எதிர்வரும் 5ஆம் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12-00 மணிக்கு திறந்துவைக்கப்பட இருப்பதாக யாழ். மாநகர சபை மேயர் ந. இரவிராஜ் தெரிவித்தார். இநத அறைகளுக்கு தொலைபேசி வசதி செய்து கொடுக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்; [உ-106,19]

### ஜே. வி. பி சாடல்

(கொழும்பு)

ஆளும் அரசிற்கு எதிராக ஐ. தே. க. சமர்ப்பித்துள்ள நம்பிக்கை இல்லாப் பிரேரணையின் நோக்கம், அரசாங்கத்தினால் மக்களுக்கு பெற்றுக் கொடுக்கப்படும் பொருளாதார நிவாரணங்களையும் ஜனநாயகத்தைப் பலப்படுத்தும் திட்டங்களையும் சீர்குலைப்பது தான் என ஜே வி. பி தெரிவித்துள்ளது.

[உ-2]

### தங்கச்சங்கிலி அறுப்பு

(யாழ்ப்பாணம்]

இடம்பெயர்ந்துதுன்னாலை கோயிற் சந்தைஅருகில் வசிக்கும்கணேசலிங்கம் என்பவரது வீட்டினுள் நள்ளிரவில்புகுந்த திருடர் அங்கு உறக்கத்தில் இருந்த பெண்ணின்கழுத்தில் இருந்த சங்கிலியின் ஒரு பகுதியை அறுத்துச்சென்றுள்ளனர். (உ)

### தினசரிகள் திருட்டு

(யாழ்ப்பாணம்)

புன்னாலைக் கட்டுவன் கணேசா சனசமூக நிலையத்தில், வாசகர் நலன் கருதி வைக்கப்படும் தினசரி நாளேடுகள் விஷமிகள் சிலரால் களவாடிச் செல்லப்படும் சம்பவங்கள் நாளும் இடம் பெறுவதாக கவலை தெரிவிக்கப் படுகிறது.

விஷமிகளின் இச் செயலால் வாசகர்கள் பெருத்தஏமாற்றமுறுவதாகவும் தெரிய வருகிறது. (உ-2)

### கட்டாக்காலிகளை கட்டுப்படுத்த நடவடிக்கை

(காரைநகர்)

காரைநகர்ப் பகுதியில் பெரும்போக நெற்செய்கைக்கான ஆயத்தங்களில்விவசாயிகள் ஈடுபட்டுள்ளதுடன் கட்டாக்காலி கால்நடைகளைக் கட்டுப்படுத்தும்விடயத்திலும் அதிக கவனம்எடுத்துள்ளனர்.

(உ-238)

### செயற்றிட்டம் சமர்ப்பிப்பு

(யாழ்ப்பாணம்)

உயர் தொழில் நுட்ப நிறுவனப் பணியாளரினால், 91. 6 மில்லியன் ரூபாவிற்கான செயற்திட்டம் ஆசிய அபிவிருத்தி வங்கியிடம்சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக, இவ்வருட ஆரம்பத்தில் இடம் பெயர் சேவையின் போது, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கோரிக்கை விடுத்ததும் குறிப்பிடத்தக்கது; (உ-2)

### கரவெட்டி பெண்ணுக்கு அதிர்ஷ்டம்

(மந்திகை)

லக்ஸ் சோப்பிற்குள் வைக்கப்பட்ட தங்க நாணயம் ஒன்று கரவெட்டி கிழக்கைச் சேர்நத செல்வமுத்து புஷ்பராணி என்பவருக்கு கிடைத்துள்ளது.

இதற்குமுன்னரும் கரவெட்டிப பகுதியைச் சேர்ந்த ஒருவருக்கு இவ்வாறு தங்க நாணயம் கிடைக்கப்பெற்றதும் இங்கு குறிப்பிடத்தக்கது, (உ-23)

## கைதடி மீனவர்கள்

# மீன்பிடி வலைகளை மீளப்பெற அனுமதி

(தென்மராட்சி)

கைதடி நாவற்குழிப்பகுதி மீனவர்களால் கடற்கரையில் கைவிடப்பட்ட 30 வள்ளங்களையும் மீன்பிடி வலைகளையும்மீளப் பெறுவதற்கான அனுமதியை அமைச்சர் கே. என். டக்ளஸ் தேவானந்தா படைத்தரப்பினருடன் பேச்சுவார்த்தை நடத்தி வழங்கியுள்ளார்;

இப்பகுதி மீனவர்கள் அமைச்சரைச் சந்தித்து தமது தொழிலுக்கான உபகரணங்களின் இழப்புகள் பற்றி எடுத்துக் கூறியிருந்தமையைத் தொடர்ந்தே இந் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது; (உ-77,10,)

## நம்பிக்கையில்லாப்பிரேரணை

# தமிழர் விடுதலைக்கூட்டணி ஆதரவு வழங்க வேண்டும்

(கொழும்பு)

பொதுஜன ஐக்கியமுன்னணி அரசுக்கெதிராக ஐக்கிய தேசியக்கட்சி கொண்டு வந்துள்ளநம்பிக்கையில்லாப்பிரேரணைக்கு தமிழர் விடுதலைக் கூட்டணி ஆதரவு வழங்க முன்வர வேண்டுமென்று அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் தலைவரும் யாழ். மாவட்ட எம்.பியுமான அ. விநாயகமூர்த்தி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் கருததுத் தெரிவிக்கையில் ஐக்கியதேசியக்கட்சிகொண்டு வரவுள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் ஒப்பமிட தமிழர்விடுதலைக் கூட்டணி மறுததுள்ளது.

முன்னர் சமர்ப்பிக்கப்பட விருந்த நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு தமிழர்விடுதலைக் கூட்டணி ஒப்பமிட்டிருந்தது. இந்நிலையில் அப்போதைய அரசியல் சூழ்நிலைக்கும் தற்போதைய சூழ்நிலைக்கும் உள்ள வித்தியாசம் என்ன? அரசின் நிலைப்பாட்டில் ஏதாவது மாறுதல் ஏற்பட்டிருந்தால் கூட்டணி தெளிவாக்க வேண்டும். அப்படி ஏதாவது இல்லாத பட்சத்தில நம்பிக்கை யில்லா தீர்மானத்திற்கு கூட்டணி ஆதரவுதர வேண்டும், என்றும் அவர் கேட்டுள்ளார்.

இது இவ்வாறு இருக்க ஐ. தே. க. நேற்றுமுன்தினம் சமர்ப்பித்திருந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையில் கட்சியின் தலைவர் ரணில்விக்கிரமசிங்க உட்பட ஐந்து எம்பிக்கள் மட்டுமே ஒப்பமிட்டிருந்தனர் என்றும், முன்னர் சமர்ப்பிக்கப் பட்டிருந்த நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு எம்பிக்களும், கட்சித்தலைவர்களும் காட்டிய ஆர்வம் இப்போதுகாட்டாத நிலையில் நம்பிக்கையில்லாப் பிரேரணை என்னவாகும்என்பதை எவரும் அறுதியிட்டுக் கூறமுடியாதிருப்பதாக அரசியல்அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்

அதேவேளை பாராளுமன்றம். கலைக்கப்படலாம் என்று கூறப்படுவதையும் அவர்கள் முற்றாக மறுத்துள்ளனர்(வ)

## முன் அனுமதி பெறாத

# வர்த்தக விமானங்களை சுட்டு வீழ்த்த அனுமதி

வர்த்தக விமானங்களைச் சுட்டு வீழ்த்துவதற்கு வேண்டிய அதிகாரத்தை இரு அமெரிக்க விமானப்படையின்நடுத்தர அதிகாரிகளுக்கு அமெரிக்க அரசு வழங்கியுள்ளது;

ஜனாதிபதியிடமிருந்து முன்னனுமதி பெறாமலேயே அமெரிக்க நகரங்கள் மீது மிரட்டல்களை விடுக்கும் விமானங்களைச் சுட்டு வீழ்த்துவதற்கு இரு அதிகாரிகளிற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அதிகாரி ஒருவர் வியாழனன்று தெரிவித்தார்; (உ)

## இராசி பலன்

1-10-2001
புரட்டாதி 15 திங்கள்
சதுர்த்தசி பி.ப 5.50
பூரட்டாதி மு:இ 8.17
இராகுகாலம் 7.32-9.02
சுபநேரம் 12:02-1.32
நடேசர் அபிஷேகம்

**மேடம்**

தொழில் சிந்தை, காரிய நன்மை, தனலாபம், நல்ல கௌரவம்.

**இடபம்**

நல்ல செய்தி, உற்சாகம், பணியாளர் உதவி, சுப நிகழ்வு.

**மிதுனம்**

பிரயாணம், அதிகாரம், மனக்கிலேசம், காரிய தாமதம்.

**கடகம்**

உறவினர் மனஸ்தாபம், அமைதிக் குறைவு, முயற்சி தடங்கல்,போசன சுகம்.

**சிங்கம்**

கௌரவம், சிநேகிதர் சந்திப்பு, காரிய அனுகூலம், பொருள் சேர்க்கை.

**கன்னி**

உடல் நலம், திடீர் பயணம்,புதிய முயற்சி, நல்ல சம்பவம்.

**துலாம்**

பிரயாண தாமதம், மதிப்புக் குறைவு, புத்திரரால் கவலை, செய்தொழில் சிறப்பு.

**விருச்சிகம்**

ரோக பயம், சகோதரர் உதவி, மனப்பதட்டம், முயற்சி தாமதம்.

**தனுசு**

குடும்ப நன்மை, தொழில் சிறப்பு,வரவேற்பு, உறவினர் வருகை.

**மகரம்**

மாதர் நட்பு, புதிய திருப்பம் முயற்சி தாமதம், வீண் செலவு.

**கும்பம்**

ஜனவசியம், முயற்சி பலிதம், தொழில் சிறப்பு, சயன சுகம்.

**மீனம்**

வீண் கோபம் பிரயாண அலைச்சல், எதிர்பாராத நன்மை,சயன சுகக்குறைவு.

(பழைய நேரப்படிகணிப்பிடப்பட்டது)

வளவன்

## எட்டு வயது நிரம்பிய

# சிறுவர்களுக்கு ரூபெல்லா தடுப்புமருந்துவழங்கமுடிவு

### வைத்திய நிபுணர் தெரிவிப்பு

(கொழும்பு)

நாடு முழுவதிலுமுள்ள எட்டு வயது நிரம்பிய சிறுவர்களுக்கு ரூபெல்லா தடுப்பு மருந்து வழங்க சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளதாகதொற்று நோய்சிகிச்சை நிபுணர் ஆனந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

இத்தீர்மானத்தை உடனடியாக அமுல் படுத்துமாறு பிரதேச சுகாதார அதிகாரிகளுக்கு சுற்று நிருபங்கள் மூலம் அறிவித்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்;

இம் மருந்தினை யுனிசெவ் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் வழங்கியுள்ளதாகவும், 16 வயதிற்கு மேற்பட்ட பெண்பிள்ளைகளுக்கு இம் மருந்து ஏற்றப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது; (க-4)

# யாழ். வடமராட்சி ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் ஆலய
# தேர், தீர்த்தோற்சவ சிறப்பு மலர்

**1 - 10 - 2001 தேர் 2 - 10 - 2001 தீர்த்தம்**

## கண்ணனைப் பணிந்து கலியைத் தாண்டுவோம்!

''எதைக் கேட்பில் மனதில் தெளிவு ஏற்படுமோ எதைச் செவிமடுத்தால் இறைவனது திருவருள் தித்திக்குமோ அடியார்களைப் பாதுகாக்கும் இயல்புள்ள இறைவன் எதன்பொருட்டு எதைச் செய்ய விரும்பி தேவகியின் வயிற்றில் அவதரித்தார்? எவரது பெயரை உச்சரித்தால் பிறப்பு இறப்பு பந்தங்களினின்று ஒருவனால் விடுபட முடியுமோ, பயமும் பயந்து விலகிப் போகுமோ, எவரது திருவடிகளை தேவர்களும், முனிவர்களும், மானிடர்களும் அடைக்கலம் என நம்பி இருக்கிறார்களோ அவருடைய திவ்ய சரித்தைக் கேட்க யாருக்குத் தான் பிரியம் ஏற்படாது?

தனது மாயா சக்தியினால் மச்சாவதாரம் முதலிய பல வித அவதாரங்களை எடுத்தவரும் தர்மத்திற்கு அரண் போன்ற வரும் நல்லார்க்கு அன்பருமான ஸ்ரீகிருஷ்ணன் இவ்வுலகை விட்டு பரமபதம் அடைந்த பின் தர்மம் இப்பொழுது யாரைச் சரணடைந்துள்ளது? கலியுகம் பிறந்து விட்டது! எனவே கலியைத் தாண்ட விருபும் எமக்கு ஸ்ரீகிருஷ்ணனுடைய திவ்ய சரிதங்களைக் கூறியெம ஆவலைப பூர்த்தி செய்யவேண்டும்'' என சனகாதி முனிவர்கள் சூதமா முனிவரிடம் கேட்டார்கள். (ஸ்ரீமத் பாகவதம்)


இன்று தேரேறி அருள வரும் ஸ்ரீமத் நாராயணனை நரமும் போற்றிஅவன்புகழ்பாடி அவனைத்தரிசித்து கலியைத் தாண்டுவோமாக. எல்லோருக்கும் எங்கள் நல்லருளாசிகள்.

'நாராயணனே சரணம்!'

ஆலய பிரதான சிவாச்சார்யார்கள்
பிரம்மஸ்ரீ ச. க. புருஷோத்தமக்குரு
ச. க. சுதர்சனக்குரு
ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் சுவாமி கோவில்
துன்னாலை-புலோலி

26-09-2001

ஆதிமூல லஷ்மி நாராயண அமுத சுரபி [அன்ன தானமடம்] யில் மஹோற்சவபதினேழுநாட்களும் அன்னதானம் நடைபெறுகின்றது. இதில் பக்த அடியார்கள் பங்களிப்பு செய்யலாம்.



## அறங்காவலர் சபையின் வாழ்த்து

இவ்வாண்டு ஆனி மாதம் 10ம் திகதி எம் பெருமான் ஸ்ரீவல்லிபுர சக்கர ஆழ்வாருக்கு மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது. அதில் பல்லாயிரம் பக்தர்கள் கலந்து அருள் பெற்றனர். இன்று (01-10-2001) தேர் உற்சவமும் நாளை (02-10-2001) சமுத்திர தீர்த்த உற்சவமும் நாளை மறுதினம் (03-10-2001) பட்டுங் தீர்த்தமும் நடைபெறவுள்ளன. இவ்வுற்சவங்களில் பக்தர்கள் அனைவரும் கலந்து அவருடைய அருள்பெற்று சாந்தியைப்பெறுவீர்களாக.

நாராயணனே சரணம்

இ. அன்னலிங்கம்
தலைவர்
அறங்காவலர் சபை

## சரித்திர மாயவன் தேரினில் வருகிறான்!

மண்ணினை யுண்டவன்,
மண்ணிலே வாழ்கிறான்,
அன்னவன் மலரடி,
அனுதினம் பணிவோம்!

உண்ணத் தருவான்,
உண்ணும்போதே பறிப்பான்!
என்னதனைச் சொல்ல———
அன்னமுமவன்தான்
அனைத்து மேயவன்தான்,
எண்ணமுமவன்தான்,
எழுத்து மேயவன்தான்!
பொல்லாத மாயவன்,
வல்லிபுரத்திலுறைகிறான்!
சங்கு முழங்குது
சக்கரம் சுழலுது!
சரித்திர மாயவன்,
தேரினில் வருகிறான்!
புரிந்துணர் வடைகிறோம்
புண்ணியம் சேருது!

நாளைக்கென்று நீ!
கோழையாயிராதே!
உழைப்பினைத் தேடு,
வாழ்வுயருமினி———
வறுமை யொழியுமென்றான்,
வல்லிபுரத்துச்சக்கரத்தான்!

மாருதி
ஆவரங்கால்

## கீதை சொன்ன கண்ணன் வண்ணத்தேர்ஏறிவருகிறான்

இலங்கையில் சிகரமென விளங்கும் யாழ்ப்பாணம் வடமராட்சிப்பகுதியில் அமைந்துள்ளதும் மிகவும் புராதனமானதுமான சரித்திர பிரசித்தி பெற்ற ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலயம் மூர்த்தி, தலம் தீர்த்தம் ஆகியவற்றை ஒருங்கே கொண்ட வரலாற்று சிறப்பு மிக்கஆலயமாகும்

இவ்வாலயத்தின் தோற்றத்திற்கு அகிலாண்ட கோடி பிரமாண்ட நாயகன் ஸ்ரீ மன் நாராயணன் பல்லாண்டு கட்கு முன்னர் வங்கக் கடலிலே மச்ச அவதாரமாக அவதரித்து வல்லிபுரம் பதியினிலே கோயில் கொண்டார்.

இந்த மச்ச அவதாரம் எடுத்த தினமாகிய புரட்டாதி மாதத்தில் வரும் பௌர்ணமி திதியில் கோதுணி முகூர்த்தத்தில் ஆதவன் அந்தி சாய்த்து மேற்கே அஸ்தமிக்க பூரண சந்திரனின் குளிர் ஒளியின் உதயத்தில் தொண்டர்கள் புடைசூழ எம் பெருமான் கற்கோவளம் திருப்பாற் கடலில் தீர்த்தமாடும் புனித நாளாகும்.

மேலும் எமது ஆலயத்தில் விசேடமாக இரண்டுவகையான தீர்த்தோற்சவங்கள் நடைபெறுகின்றன. ஒன்று சமுத்திர தீர்த்தமும் மற்றையது மறு நாள் ஆலய நீர்த்தடாகத்தில்சக்கர ஆழ்வார் தீர்த்தமாடுதல் ஆகும். இவ்விரு புனித நாட்களில் எல்லாம் வல்ல காத்தற் கடவுளாகிய திருமாலின் சக்கராயுதத்தை வழிபடும் பல்லாயிரக்கணக்கான பக்த கோடி மக்களுக்கு எம்பெருனின் அருள் கிடைக்க வேண்டும்.

த. ஜெயரூபன்
பொ. அருந்தவராசா
கற்கோவளம்.

## என்றென்றும் துணை நிற்பாயே

செல்வமொடு கல்வி வளம் மிக்கு என்றும்
சிறப்புடனே உலகினங்கள் போற்றும் பண்பார்
நல்ல பதியாம் பருத்தித்துறையின் கீழ் பால்
நந்தூரும் கற்கோவளம் கடற்கரையிலமைந்து மாயன்
சொல்லரிய மகிமைபெறு மிலவல்லித்தாய்
தூயமடிமீனுருவமாக வீழ்ந்து
வல்லமையார் குழந்தை வடிவாக மாறி
சக்கரமாய் வல்லிபுரமமர்ந்த தேவே

ஓங்கு திரை யெறிகடலின் தீர்த்தம் மேவி
உரைபெறு நற்கதியினை தேடும் கற்கோவளம்வாழ் மக்கள
தேங்கு புகழோடுறையும் கண்ணன் வல்லி
புரக் கோயில் திருப்பணிகள் செய்யும் மக்கள்
பாங்குபெறு வாழ்வதுதான் வாழ்ந்து மேலும்
பலமான வரமது தான்கிட்டும் பேறும்
தாங்கு புகழ் மக்களென நின்று வாழ
தருவாகி என்றென்றும் துணை நிற்பாயே

ஆக்கம்
மு. தணிகாசலம்
கறகோவளம்

**யோகாஸ் கிறீம்ஹவுஸ்**
கந்த முருகேசனார் சிலையடி
மந்திகை.

**வே. மனோகரன்**
சைக்கிள், சைககிள் உதிரிப்பாகம்
கட்டிடப் பொருட்கள், பெற்றோமாக்ஸ்
உதிரிப்பாகம், மின்சாரஉபகரணங்கள்
விற்பனையாளர்கள்
**கிளை: கோபாலா**
**தொலைத்தொடர்புநிலையம்**
T. P. No: 070-212372
021-3277
070-212693
Fax: 070-212372
சாவகச்சேரி வீதி,
மந்திகை, புலோலி.

**ஜனனி நகைமாடம்**
மருதடி பருத்தித்துறை,
**ஜனனி நகைமாடம், கிளை- 1**
பஸ்நிலைய அருகாமை,
பிரதானவீதி, பருத்தித்துறை.
**ஜனனி நகைமாடம்**
மத்திய மகாவித்தியாலயம் வீதி, நெல்லியடி.
உங்களது நயம் நம்பிக்கைநாணயமுள்ள
தங்க வைர நகைகளுக்கு
சிறந்த ஸ்தாபனம்.

**லிங்கன் கிறீம் ஹவுஸ்**
119, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

**தரன் நகைமாளிகை**
பிரதான வீதி பஸ்நிலையஅருகாமை
பருத்தித்துறை.
**தரன் நகை மாளிகை கிளை-1**
பிரதான வீதி, மருதடி, பருத்தித்துறை.
நவநாகரிக டிசைன்களுக்கு
உத்தரவாதத்திற்கு
உறுதியான வேலைக்கு
இன்றே விஜயம் செய்யுங்கள்.

**கணேசா நகை மாளிகை**
பிரதான வீதி,
மருதடி, பருத்தித்துறை.
அழகிற் சிறந்த தங்க நகைகளுக்கு
சிறந்த இடம்

**ஜெய கணேசா ஸ்ரோர்ஸ்**
பஸ்நிலையம் பருத்தித்துறை.

**ஹரிஸ்- மந்திகை**
கட்டிடப் பொருட்கள் துவிச்சக்கரவண்டி
உதிரிப்பாகங்கள் மின்சாரப்
பொருட்கள் விற்பனையாளர்கள்.

# இஸ்லாமிய இயக்கத்திற்கு தடை

# அரசியல் மயப்படுத்த வேண்டாம்

## இந்திய மத்திய ஊடக அமைச்சர் வேண்டுகோள்

(சென்னை)

தேசிய நலனைக்கருத்திற் கொண்டே இந்திய இஸ்லாமிய இயக்கம் தடை செய்யப்பட்டதாகவும், இதை அரசியலாக்க வேண்டா மென்றுமத்திய ஊடக வளர்ச்சித்துறை அமைச்சர் ரெங்கையா நாயுடு தெரிவித்தார்.

நேற்று முன் தினம் சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்த இயக்கத்தினர் தேசவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடுவதாகத் தகுந்த ஆதாரங்கள் கிடைத்த பின் தான் மத்திய அரசு தடை செய்யும் முடிவுக்கு வந்தது என்று தெரிவித்தார்.

மேற்படி மாணவர் இயக்கம் மதத்தின் பேரால் இஸ்லாமிய சமூகத்துக்கு களங்கம் விளைவிக்கும் வகையில் செயற்பட்டதாகவும்; சர்வதேச பயங்கரவாத இயக்கங்களுடன் அது தொடர்பு வைத்திருந்தமை உறுதிப்படுத்தப்பட்ட பின்பே தடை செய்யப்பட்டது என்றும் அவர் குறிப்பிட்டார்.

எதிர்க் கட்சிகள் இந்தவிடயத்தில் மத்திய அரசுடன் இணைந்து செயற்பட வேண்டும் என்றும் இதேபோன்று தேசவிரோத இயக்கம் எதையும் அரசு தடைசெய்யத் தயங்காது என்றும் தெரிவித்தார். (து)

## அமெரிக்கா மீதான தாக்குதலுக்கு உதவிய அல்ஜீரிய விமானி கைது

(லண்டன்)

அமெரிக்க நகரங்கள் மீதான தாக்குதலில் ஈடுபட்ட 4 விமானிகளுக்குப் பயிற்சி வழங்கினார் என்ற சந்தேகத்தின் பேரில் அல்ஜீரிய நாட்டு விமானி ஒருவரை லண்டனில் வைத்து பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சர்வதேச அளவில் தொடர்புகள் வைத்துள்ள பணபலம் மிக்க அமைப்பு ஒன்றின் உறுப்பினராக மேற்படி நபர் உள்ளமை விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது. (உ-2)

## ஆப்கான் சென்ற பிரிட்டிஷ் பெண் பத்திரிகையாளர் கைது

(காபூல்)

ஆப்கானிஸ்தானுள் சட்டவிரோதமாக நுழைந்த பிரிட்டனைச்சேர்ந்தபெண் செய்தியாளரை தலிபான்அரசுகைது செய்துள்ளது.

சண்டேஎக்ஸ்பிரஸ் பத்திரிகையின் செய்தியாளர் இவோன் ரைஸ்லி என்பவரே கைது செய்யப்பட்டவர்.

இவர் ஆப்கானிய முறைப்படி உடை அணிந்து இரண்டு வழிகாட்டிகளுடன் சென்ற போதே கைதுசெய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப் படுகின்றது. (உ-2)

## இஸ்லாம் மதத்திற்கு அமெ. அதிபர் புகழாரம்

(வாஷிங்டன்)

அன்பு, அமைதி மற்றும் கருணை ஆகியவற்றைக் கொண்டது இஸ்லாம் என்று அமெரிக்க அதிபர் புஷ் புகழாரம் சூட்டியுள்ளார்.

அமெரிக்க நகர் தாக்குதலின் பின் சந்தித்த ஜோர்தான் மன்னர் அப்துல்லாவுடன் உரையாடிவிட்டு பத்திரிகையாளர்களிடம் புஷ் பேசுகையில் ஒஸாமாபின்லேடனோடு தொடர்புடைய அல்கிரிடா இயக்கம் இஸ்லாம் கொள்கைக்கு மாறானது, அது தீய செயல்களைக் கடைப்பிடிப்பது என்று குறிப்பிட்டார்.

தொடர்ந்து பேசிய அதிபர் புஷ் ஜோர்தான் மன்னர் உலகபயங்கரவாதத்துக்கு எதிராக எம்மோடு சேர இணங்கியுள்ளார்.

அதேவேளை எப்படியான உதவிகளை எந்தவகையில் செய்யலாமென்று சிந்திக்கிறார் என்று குறிப்பிட்டார்.

மிதவாதக் கொள்கையுடைய ஜோர்தான் அரசு எமக்கு உதவமுன் வந்திருப்பது வரவேற்கத்தக்கதென்றும் அப்துல்லா பகிரங்கமாக அமெரிக்காவில் நடத்தப்பட்டதாக்குதலைக் கண்டித்துள்ளார் என்று தெரிவித்தார். (து)

## அமெரிக்காவுக்கு துணை நிற்கப் போவதாக மலேசியா அறிவிப்பு

(கோலாலம்பூர்)

பயங்கரவாதிகளுக்கு எதிராக அமெரிக்கா எடுக்கும் எந்த நடவடிக்கைகளுக்கும் துணை நிற்பதாக மலேசியா அறிவித்துள்ளது.

இதேவேளை, அமெரிக்கா ஆப்கான் மீது போர் தொடுக்கும் நடவடிக்கைக்கு மலேசியா எதிர்ப்புத் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

அது மாத்திரமன்றி எந்த ஒரு நாட்டுக்கு எதிராகவும் போர் தொடுப்பதை விரும்பவில்லையென்று மலேசியப் பிரதமர் மகதிர் முகமத் கூறியுள்ளார்.

அவர் மேலும் தொடர்கையில், ஆப்கான்மீதுஅமெரிக்கா போர் தொடுக்குமாயின் வீணே அப்பாவி ஆப்கான் பொதுமக்கள் அழிய நேரிடுமென்றும் போரை விடுத்து பயங்கரவாதிகளை மாத்திரம் தாக்கிப் பிடிக்கவேண்டும் என்றும் தெரிவித்தார். (து)

## விசாரணையின் பின் 100 பேர் மைசூரில் விடுதலையாகினர்

[மைசூர்]

சந்தனக் கடத்தல் வீரப்பனுக்கு உதவியாகச் சிறை வைக்கப்பட்ட 100 பேரை மைசூர் தனிநீதிமன்ற நீதிபதி விடுதலை செய்துள்ளார்.

இந் நீதிமன்றத்தில்சந்தனக் கடத்தல் வீரப்பன் தொடர்பாகத் தொடரப்பட்ட வழக்கில் வீரப்பனுக்கு உதவிய தாக 100ற்கு மேற்பட்டோர் கர்நாடகப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு விசாரிக்கப்பட்டுவந்தனர்.

நீதிபதி கிருஷ்ணப்பா தீர்ப்பு வழங்குகையில்; விடுவிக்கப்பட்டோரைத் தவிர 7 பேர் சந்தனக் கடத்தல் வீரப்பனுடன் நெருங்கிய தொடர்பு கொண்டு தமிழ் நாட்டில் நடைபெற்ற பொலிஸ் நிலையங்கள் தாக்குதலுக்கு உடந்தையாக இருந்தார்கள் என்றும்,

அவர்களது குற்றங்கள் நிரூபிக்கப்பட்டிருப்பதால் அவர்களுக்கு ஆயுள் கால சிறைத் தண்டனை விதிப்பதாகவும் தீர்ப்பளித்தார். (எ, து-2)

## பயணி புகைத்தார் விமானம் தரையிறக்கம்

(லொஸ்ஏஞ்சல்ஸ்)

அமெரிக்க லொஸ் ஏஞ்சல்ஸ் நகரிலிருந்து கனடாவின் ரொறன்ரோ நகருக்குச் சென்று கொண்டிருந்த போயிங் 746 பயணிகள் விமானம் திடீரென புறப்பட்ட இடத்திற்கு திருப்பி செலுத்தப்பட்டு தரை இறக்கப்பட்டது.

மேற்படி விமானத்தில் 145 பேர் பயணம் செய்து கொண்டிருந்தனர். அவ்வேளையில் பயணி ஒருவர் கழிவறையிலிருந்து புகைக்கத் தொடங்கினார். விமானப்பணியாளர்கள் மூலம் அதை அறிந்த தலைமை விமானி நியூயோர்க், வாஷிங்டன் மீதான தாக்குதலின் பின் விதிக்கப்பட்டுள்ள கடுமையான சட்டங்களுக்கமைய விமானத்தை லொஸ் ஏஞ்சலுக்குத் திருப்பினார்.

புகைத்த பயணியின் செயல் அமெரிக்க எதிர்ப்பு என்று கணிக்கப்பட்டு விமானம் தரை இறக்கப்பட்டவுடன் அவர் கைது செய்யப்பட்டார்; அவரதும் ஏனைய பயணிகளதும் உடைமைகள் கடுமையான சோதனையின் பின் விமானம் செல்ல அனுமதிக்கப்பட்டது.

மேற்படி விமானம் தரை இறக்குவதற்காகத் திருப்பப்பட்ட போது தகவல் அறிந்து உடனடியாக இரண்டு எப் 16 போர் விமானங்கள் சென்று அதைக் கண்காணித்து அழைத்து வந்தன. அவசியம் ஏற்பட்டால் உடனடியாகச் செயற்பட 100 போர் ஜெற் விமானங்கள் மேற்படிவிமான நிலையத்தில் தயார் நிலையில் வைக்கப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது. (எ-02)

## பயங்கரவாதத்திற்கு ஆதரவான சகல உதவிகளும் தடுக்கப்படவேண்டும்

## ஐ. நா. சபை தீர்மானம்

(ஜெனிவா)

பயங்கர வாதத்திற்கு ஆதரவாக நிதி மற்றும் பொருளுதவி செய்யும் சகல வழிகளையும் அனைத்து நாடுகளும் தடுக்கவேண்டும் என்ற தீர்மானத்தை ஐக்கிய நாடுகள் சபை ஏகமனதாக நிறைவேற்றியுள்ளது.

ஐ. நா. பாதுகாப்புச் சபையின் இந்த ஒப்புதலின்படி பயங்கரவாதிகள் வைத்திருக்கும் வங்கிக் கணக்குகள் நிறுத்தப்பட வேண்டும், பயங்கரவாதத்துக்கு வழங்கும் எல்லா வகை ஆதரவும் அடைக்கலமும் நிறுத்தப்படவேண்டும், பயங்கரவாத உளவுத்தகவல்களை நாட்டுக்கு நாடு பரிமாறிக் கொள்ள வேண்டும் என்று அந்தத் தீர்மானம் மேலும் கூறுகிறது.

ஐ. நாவின் மேற்படி தீர்மானத்தை மீறும் நாடுகள் மீது சர்வதேசத்தடைகள் விதிக்கப்படலாம், என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருப்பது ஐ. நா. வரலாற்றில் சிறப்பு மிக்க அம்சமென்று சொல்லப்படுகிறது.

பயங்கரவாதம் எது என்பதை இந்தத் தீர்மானம் சுட்டிக் காட்டத் தவறிய போதும் அமெரிக்கா மீதான தாக்குதல் இதற்குச் சான்றாக அமைகிறது என்று தெரிய வருகிறது. (து)

## உலக தரிசனம்

## செய்திப்பரல்

★ மஸடோனியாவில் உள்ள அல்பேனிய கெரில்லாக்கள் இயக்கம் கலைக்கப்படுவதாக அந்த இயக்கம் அறிவித்துள்ளது.

★ ஈராக்கின் தெற்கில் உள்ள விமான எதிர்ப்பு நிலைகள் மீது அமெரிக்க மற்றும் பிரிட்டிஷ் விமானங்கள் தாக்குதல் நடத்தியுள்ளன.

★ ஆயுதங்களை கைவிடுமாறு மொஸ்கோ விடுதத கோரிக்கையை செச்சினிய கெரில்லாக்கள் நிராகரித்துள்ளனர்.

★ சீனாவின் தென்மேற்கு 'சிசுவான்' மாகாணத்தில் ஏற்பட்ட மண்சரிவில் 11 பேர் புதையுண்டதாகவும் 8 பேர் கொல்லப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

★ சூடான் மீதான தடையை ஐ. நா. பாதுகாப்புச்சபை அகற்றுவதற்கு அமெரிக்கா உதவ இருக்கிறது. (க-03)

## யுத்த நெருக்கடியில் தலிபான் அரசு

## ரஷ்ய துருப்புக்களும்விரைவு

(மாஸ்கோ)

கஜகஸ்தான் நாட்டிற்கு 1500 படையினரை ரஷ்யா அனுப்பியிருக்கிறது.

தலிபான் அரசை நோக்கிப் போர் மேகங்கள் சூழ்ந்து வரும் இந் நாட்களில் தலிபான் அரசிற்கு உதவும் பொருட்டு இப் படைகளை ரஷ்யா அனுப்பியுள்ளது.

மேற்படிபடையைச்சேர்ந்த போர் வீரர்கள் ஏற்கனவே ஆப்கான் செச்செனியப் போரில் ஈடுபட்டவர்களென்றும் அதனாலேதான் அப் போர் வீரர்களை அனுப்பி வைத்ததாகவும் ரஷ்யா தெரிவித்துள்ளது.

ஏற்கனவே ஆப்கானிஸ்தான் வடக்குக் கூட்டணி தலிபானுடன் போர் செய்வதற்கு அமெரிக்காவிடமும் ரஷ்யாவிடமும் உதவிகளைக் கோரியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (து)

## இந்திய கிரிக்கட் சபைக்கு புதிய தலைவர்

(சென்னை)

இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபையின் தலைவராக ஜெட் மோகன் டால்மியா தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

சென்னையில் நடைபெற்ற இந்திய கிரிக்கெட்கட்டுப்பாட்டுச்சபையின் 22 வதுபொதுக் குழுக்கூட்டத்தில், தலைவர் பதவிக்கான தேர்தல் இடம்பெற்றது இது வரை காலமும் தலைவராக இருந்த ஏ.சி. முத்தையா தலைவர் பதவிக்கானதேர்தலில்போட்டியிட்டு நான்கு வாக்குகளால் தோல்வியைத் தழுவிக் கொண்டார் இன்னுமொரு அதிரடிமாற்றமாக இதுவரை காலமும்செயலாளராக இருந்த தேவன் லேலே ஒரு வாக்கினால் தனது செயலர் பதவியை நிரஞ்சன் ஷா இடம்பறி கொடுத்துள்ளார். (செ-207)

## பங்களாதேஷில் வன்முறைகள்

(டாக்கா)

பங்களாதேஷில் நடைபெறவுள்ள தேர்தலுக்கு முன்னதாக இடம் பெற்ற, அண்மைய வன்முறைகளில் 10 பேர் கொல்லப்பட்டும் 300 ற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நாடெங்கும் கலவரங்களைக் கட்டுப்படுத்த 55 000 பொலிஸார் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும், பங்களாதேஷில் உள்ள மிகப்பெரிய கட்சிகளான அவாமிலி லீக் கட்சி ஆதரவாளர்களும் வங்கதேச தேசியக்கட்சி ஆதரவாளர்களும் தொடர்ந்து மோதல்களில் ஈடுபட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (எ-2)

## யாழ், நவீனசந்தை

(3-ம பககத் தொடர்ச்சி)

நூல்கள் வைப்பதற்கான அலுமாரிகள் செய்யும் வேலையை யாழ். மாநகர சபை பொறுப் பேற்றுள்ளது இதன் மூலம் 27 இலட்சம் ரூபா வேலைத்திட்டத்தை யாழ்.மாநகர சபை முன்னெடுக்க உள்ளது,

யாழ். மாநகர சபையின் சுகாதாரப் பகுதியில் ஏற்பட்டுள்ள ஆளணிப் பற்றாக்குறை நிரப்புவதற்கான அனுமதியும் வடக்கு-கிழககு மாகாண சபையிடம் இருந்து கிடைக்கப் பெற்றுள்ளது, (க-10-9)

## வழிகாட்டல் வகுப்பு

(கொழும்புத்துறை)

யாழ்ப்பாணப் பிரதேச செயலர் பிரிவு அபிவிருத்தித் தொண்டர்களுக்கான வழிகாட்டல் வகுப்புக்கள் சுண்டுக்குளி மகளிர் கல்லூரிக்கு அருகிலுள்ள மேல்மாடிக் கட்டடத்தில் வார நாட்களில் நடைபெற்று வருகின்றன. (செ-223)

பல்குழுவும் பாழ்செய்யும்
உட்பகையும் வேந்தலைக்கும்
கொல்குறும்பும் இல்லது நாடு

குறள்

# வலம்புரி

## கைதாகும் பரிதாபம்

ஈழத்தமிழர்கள் உள்நாட்டில் மட்டுமல்ல, வெளிநாடுகளிலும் கைதாகும் பரிதாபம் கண்டு குமுறாத நெஞ்சங்கள் இருக்க முடியாது. ஒரு காலத்தில் சொந்த மண்ணில் சுதந்திரமாக நடமாடிய தமிழ் இளைஞர்கள், யுவதிகள் இன்று நாடிழந்து, வீடு இழந்து வெளிநாடுகளில் அகதிகளாக அலைவதும், அடைக்கப்பட்ட பவுசர்களில் உயிரை பணயம் வைத்து நாடு கடப்பதும் நடுக்கடலில் வைத்து கைதாவதும் சர்வசாதாரண விடயமாயிற்று.

இவ்வாறு உயிரையே தியாகம் செய்யுமளவிற்கு வெளிநாட்டுப் பயணம் தேவைதானா என்ற கேள்வி எழுப்புபவர்களும் நம்மண்ணில் இருக்கவே செய்வர்.

சொந்த நாட்டில் உயிருக்கு உத்தரவாதம் இல்லாத போது, பிறந்து, தவழ்ந்து, கூடிக்குலாவி குதூகலித்த சொந்த மண்ணை விட்டகன்று மற்றவர் வீட்டில் மதிப்பிழந்து வாழ்வதை விட, உடன் பிறந்த சகோதரிகளின் வாழ்வைத் தடுக்கும் பொருளாதார பின்னடைவை நீக்காமல் வானம்பார்த்த பூமிபோல் இருப்பதைவிட வெளிநாடு மேலென சொந்த பந்தங்களைப் பற்றறுத்து செல்வோரே நம் இளைஞர். ஆனால், ஈழத்தமிழர்களென்றால் அவர்கள் அகதிகள், கைதிகள் என்ற அளவில் நம்மதிப்புவெளிநாடுகளில் கொடிகட்டிப் பறக்கிறது. தனக்கென்றொரு தேசம் தனக்கென்றொரு நாடு அல்லது தன் இனத்திற்கென்று உலகில் ஓர்நாடு இல்லாததன் குறைபாட்டை நடுக்கடலில் கைதாகும் - அகதிகளாக வெளிநாடுகளில் அலையும் ஒவ்வொரு தமிழ் இளைஞனும் உணரவேசெய்வான்.

"திரைகடல் ஓடியும் திரவியம் தேடு" என்ற பாடல் இன்றெல்லாம் பொருத்தமுடையதல்ல. இப்போது கடலில் கண்டபடி செல்வதை தவிர்ப்பதே நல்லது அதிலும் ஈழத்தமிழர்களெனில் அதனையும் தவிர்ப்பது நல்லது. ஏனெனில் ஈழத்தமிழர்களுக்கு இப்போது கடற்பரப்பே சத்துரு, சாதாரண பரவக் கடலில் மீன் பிடிப்பதற்கும் கவஷணத்துடன் போகவேண்டுமென்பது நிபந்தனை; இந்நிபந்தனையை விதித்த ஒரேநாடு இலங்கை.

அப்படியானால் இப்படியே ஈழத்தமிழ் இளைஞர்கள் அலைந்து திரிவது தான் விதியா?

---

### சர்வதேச சிறுவர் தினம்

# சிறுவர் நலன் பேணி, நல்வாழ்வு கொடுக்கும்

# பெரிய பொறுப்புச் சமூகத்திற்கே!

சமூகஜோதி
**கா. கணேசதாசன்**

இன்றைய சிறுவர்கள் நாளைய சமூகத்தின்தலைவர்கள். உலகைக் கட்டியாளப் போகும்செயல் வீரர்கள் இதனைக் கருத்திற்கொண்டுஉலக நாடுகள் சிறுவர்களின் நலன் பேணுவதற்கும் அவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் பாரிய செயல் திட்டங்களை முனைப்புடன் மேற்கொண்டு வருகின்றன.

இத் திட்டங்களுக்கு மத்தியிலும் நாளுக்கு நாள் சிறுவர்கள் கொடுமைகளுக்கும் இன்னல்களுக்கும் பல்வேறு பிரச்சினைகளுக்கும் உள்ளாக்கப்படும் செய்திகள் சர்வதேச ரீதியாக வெளிவந்த வண்ணமுளளன;

### இன்றைய உலகில் சிறுவர்கள்

உலக சனத் தொகையில் 45 சதவீதமானோர் 15 வயதுக்குட்பட்ட சிறுவர்களாவர். இவர்களில் ஐந்து வயதுக்குட்பட்ட சிறுவர்களின் எண்ணிக்கைஇருபதுசதவீதமாகும் தெற்காசிய நாடுகளைப் பொறுத்தவரை 40 சதவீதமானோர் சிறுவர்களாவர். உலக சனத்தொகையில் 16 வயதுக்குட்பட்டோர் 26 சதவீதம் தெற்காசியாவில் உள்ளனர். ஏனைய நாடுகளிலும் பார்க்க வறுமைப் பிடியில் வாழும் சிறுவர் எண்ணிக்கை தெற்காசியாவில் அதிகமாக உள்ளது. போஷாக்கான உணவோ, ஊட்டச்சத்தோ இன்மையால் நலிவுற்றுவரும் சிறுவர்களில் ஐம்பது சதவீதமானோர் இந்தியா, நேபாளம், ஆப்கானிஸ்தான், பங்களாதேஷ், பூட்டான், இலங்கை ஆகிய நாடுகளில் உள்ளனர்.

உலக மட்டத்தில்போஷாக்குக்குறைபாடுகளால் 150மில்லியன்சிறுவர்கள் அவதிப்பட்டு வருகின்றனர். முப்பது மில்லியன் சிறுவர்கள் ஆதரவின்றி தெருக்களில் காலங்கழித்து வருகின்றனர். இன்று உலக நாடுகளில் நிகழ்ந்து வரும் யுத்தங்கள் இனமோதல்கள் காரணமாக ஏறக்குறைய 7 மில்லியன் சிறுவர்கள் அகதிகளாக வாழ்ந்து வருகின்றனர்.

### சிறுவர்கள் வேலை செய்தல்

உலக நாடுகளில் சுமார் 7 கோடி முப்பது இலட்சம் சிறுவர்கள் சட்ட விரோதமான தொழில்களில் ஈடுபடுத்தப் பட்டு வருவதாகப் புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. சிறுவர்கள் எதிர்நோக்கி வரும் இவ்வாறான நடவடிக்கைகள் காரணமாகசமூகரீதியாக பல்வேறு பிரச்சினைகள் தோன்றியுள்ளன; சிறுவர்களைப் பாதுகாப்பதற்கும், சிறுவர்களின் உழைப்பைச் சுரண்டிப் பிழைப்போருக்கும் எதிராகவும் இன்று பலசட்டவிதிகளைநடைமுறைப்படுத்தியுள்ளனர். சிறுவர்களை வேலைக்கமர்த்துவதற்கான வயதெல்லை பதினான்குவயதாக அதிகரிக்கப்பட்டுள்ளது. சிறுவர்களை வேலைக்கமர்த்துவோர் இன்று சிலநிபந்தனைகளுக்குக் கட்டுப்பட வேண்டியுள்ளது; கல்வியறிவைப் பெற்றுக் கொடுத்தல், ஒய்வு வழங்கல், சிறந்த சுகாதார வசதிகளைப் பெற்றுக் கொடுத்தல், என்பனஇந்நிபந்தனைகளாகும்.

### கட்டாயக் கல்வி

'இளமையிற் கல்விசிலையில் எழுத்து' 'கற்கை நன்றே, கற்கை நன்றேபிச்சை புகினும் கற்கை நன்றே' என்ற முதியோர் வாக்கிற்கமைய சிறுவர்களின் கல்வியில் அக்கறை காட்ட வேண்டியது அனைவரது தலையான கடமையாகும்: சிறுவர்களுக்குச் சீரான கல்வியறிவையும மதரீதியான சிந்தனைகளையும் அறநெறி வாழ்வு சம்பந்தமான அறிவுரைகளையும் வழங்குவதன் மூலமும் எதிர்காலத்திலாகுதல் சிறந்த சீரான சமுதாயத்தைநாம் உருவாக்கலாம்;

### பாலியல் துஷ்பிரயோகத்தில் சிறுவர்கள்

வறுமையும், பெற்றோரின் சரியானவழி நடத்துதலுமின்மையால், இன்றைய நவீன உலகில் இலட்சக்கணக்கான சிறுவர்கள் பாலியல் துஷ்பிரயோக நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர் இதுஎதிர்கால உலகில் பாரிய சமூகப் பிரச்சினையாகுமென்பது திண்ணம் இன்று எமது நாட்டில் ஏற்பட்டுள்ள யுத்தத்தின் பக்க விளைவுகளான அகதிகள் பிரச்சினை, குடும்பக் கட்டமைப்பு சீர்குலைவு, வறுமை போன்ற காரணங்களால் பால்ய உழைப்பாளிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாலும் சிறுவர்கள், சமூக விரோதச் செயல்களில் ஈடுபட்டு வருகின்றனர். சிறுவர்களது கல்விச் செயற்பாட்டோடு பயனுள்ள புறக்கிருத்தியங்களில் ஈடுபடுவதற்கான ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்படல் வேண்டும். எதிர்கால சமூகத்தின் தூண்களான சிறுவர்களுக்கு இந்தநடவடிக்கைகள் ஒரளவாவது பயன் அளிக்கலாம்.

சிறுவர்களின் நலன்பேணும் பொருட்டே ஐ நா. சபை 1953 ஆம் ஆண்டு உலக சிறுவர் தினத்தைப் பிரகடனப் படுத்தியது. அன்று முதல் இன்று வரை ஒவ்வொரு ஆண்டும் இத்தினம் உலக மட்டத்தில் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது: சிறுவர் நலன் பேணி அவர்களது நல்வாழ்வு பெற்றுக் கொடுப்பது சமூகக் கடமையாகும். இதையுணர்ந்து சிறுவர் நலன்பேணும்திட்டங்களை சீராக நடைமுறைப் படுத்த சகலரும் ஒன்றித்துச் செயற்பட வேண்டும். □

---

# ஆப்கான் மீதான அமெரிக்கத் தாக்குதல்கள்

# நடைபெறும் சாத்தியம் வெகு குறைவே

## பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை கருத்து

(யாழ்ப்பாணம்)

ஆப்கானிஸ்தான் மீது அமெரிக்காவின் தாக்குதல்கள் இடம் பெறக் கூடிய வாய்ப்புகள் வெகு அரிதாகவே உள்ளன. அந்நாட்டின் புவியியல் அமைவிடம், காலநிலை, தரைத்தோற்ற வேறுபாடுகள் அனைத்தையும் உற்று நோக்கின் மேற்கண்ட முடிவிற்கே வரவேண்டியுள்ளது.

"அமெரிக்கா மீதான செப்ரெம்பர்-11 தாக்குதல்களும் அவற்றின் தாக்கங்களும்" என்ற தலைப்பிலான கருத்துரையை யாழ். பல்கலைக் கழக நூலக கேட்போர் கூடத்தில் அண்மையி உரையாற்றியதுணைவேந்தர்பேராசிரியர்பொ.பாலசுந்தரம்பிள்ளை மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் இது விடயம் தொடர்பாக மேலும்தெரிவிக்கையில்;

### தாக்குதல் நடத்தல் கடினம்

ஆப்கானிஸ் தான் மீது விமானத்தாக்குதல் நடத்துவதாயின் வானளவு உயர்ந்த மலைப் பிரதேசத்தால் விமானங்கள் பறப்பது மிகக் கடினம். அதைவிட குறிப்பிட்ட இலக்கை தேர்ந்தெடுத்து தாக்குதல் நடத்துவது என்பது மகா கடினம். அவ்வாறு தாக்குதல் நடக்கப் பட்டாலும்கூட ஆப்கானிஸ்தான் படைகளுக்கென நிலையான தரிப்பிடம் என்று எதுவும் கிடையாது.



ஆப்கானிஸ்தானில் அமெரிக்கப் படையினர் தரை இறங்கினால்கூட அங்கே நிலவும் மோசமானகாலநிலைக்கு தாக்குப்பிடிப்பது இயலாத காரியம். தண்ணீர் பிரச்சினைக்கு முகம் கொடுக்க வேண்டும்;

அங்கு பகலில் கடும் வெப்பநிலை காணப்படும். இரவு வேளையில் கடும் மூடு பனிகாணப்படும், இத்தமைய பாதகநிலைக்கு அமெரிக்க துருப்புகள் எவ்வாறு தாக்குப் பிடிக்கப் போகின்றது என்பதே கேள்வி;

ஆப்கானிஸ்தானுக்கு தரை வழிப் பாதைகள் இரண்டே காணப்படுகின்றன. அவைகளும் தற்போது மிகமோசமான நிலையிலே உள்ளன; தரையிறங்கிய துருப்புக்களுக்கு உணவு, நீர் விநியோகம பெரும்பிரச்சினையாகும்; இவை எல்லாவற்றையும்ஒட்டு மொத்தமாக நோக்கினால் அமெரிக்கா நேரடியாகபோர் செய்வது சாத்தியமாகாது; ஆனால் தனதுஉளவுப்பிரிவின் உதவியுடனும் ராஜதந்திர முயற்சியாலும் ஒஸாமாபின் லேடனை வெளியேற்றிவிட அமெரிக்காமுயற்சி செய்யும்.

அமெரிக்கா மேற்கு ஐரோப்பிய நாடுகளின் குடியேற்றவாசிகளால் உருவாக்கப்பட்டது; அதைவிட 17,18ஆம் நூற்றாண்டுகளிலே அடிமை வியாபாரம் நடைபெற்ற போது ஆபிரிக்க நாட்டவர்கள் அடிமைகளாகஅமெரிக்காவிற்கு கொண்டு செல்லப்பட்டனர். அதற்குப்பின்னர் தென்னாசிய நாட்டு மக்கள்அரசியல் பொருளாதார நிலைமைகளைக் கருத்தில்கொண்டு அமெரிக்காவிற்கு சென்று குடியேறினார்கள்;

அமெரிக்காவைப்பொறுத்தவரையில் அங்கு எல்லாவகை மக்களும் அமெரிக்காவின் பிரஜைகளே எல்லாவகை மக்களும புதிய முறையில் ஒழுங்கு படுத்தப்பட்டு அமெரிக்கர் என்று கொள்ளப்படுகின்றனர்.

[02ஆம் பக்கம் பார்க்க]

---

## தினசரி தியானம்

## சன்மார்க்கம்

தெளிவறியாதார் சிவனை யறியார்
தெளிவறியாதார் சீவனுமாகார்
தெளிவறியாதார் சிவமாக மாட்டார்
தெளிவறியாதவர் தீரார் பிறப்பே;

-திருமந்திரம்-

எந்தையே, உன் சந்நிதியை அணுகுமளவு உனக்கும் எனக்குமுள்ள தொடர்பை நான் நன்கு அறிகிறேன்.

சத் பொருளாகிய பரமனை நோக்கிப் போகும் மார்க்கம் சன் மார்க்கமாம். அம்மார்க்கத்திலே முன்னேற்றமடைந்து வருமளவு மனம் தெளிவடைகிறது. தெளிந்த மனதே தெய்வத்தைத் தெரிந்து கொள்கிறது;

ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர்.

# தமிழ்க் கட்சிகளை ஒன்றிணைத்து ஒற்றுமை முன்னணி அமைக்கப்படும்

## ரெலோ முதல்வர் சிறிகாந்தா

(கொழும்பு)

தமிழ் அரசியல் கட்சிகளை உள்ளடக்கி ''ஒற்றுமை முன்னணி'' எனும் அமைப்பினை உருவாக்கும் முயற்சியில் ரெலோ அமைப்பு ஈடுபட்டுள்ளதாக அக்கட்சியின் முதல்வர் என். சிறிகாந்தா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்: விடுதலைப்போராட்டத்தின் எழுச்சிக்கு அனுசரணையாக செயற்படுவதற்கு, ஜனநாயக ரீதியில் தமிழ்க்கட்சிகளுக்கிடையே ஒற்றுமை முன்னணியொன்று அவசியம்.

தற்போதுள்ள தமிழ்த் தலைவர்கள் ஒன்றுபடவேண்டிய தருணம் ஏற்பட்டுள்ளது இதனடிப்படையில் தமிழ்த் தலைவர்கள் கூட்டிணைவதற்குஅடிப்படையான அமைப்பாக ஒற்றுமை முன்னணி அமையும்.

இந்தவகையில் இவ் அமைப்புக்கு ஆதரவு திரட்டும் வகை இவ்வாரம் ஈ.பி ஆர்.எல்.எவ் சுரேஸ் அணியின் செயலாளர் நாயகம் சுரேஸ் பிறேமச்சந்திரனுடனும் அடுத்த வாரம் அகில இலங்கைத்தமிழ்க் காங்கிரஸ் மற்றும் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களுடனும் பேச்சுநடத்த உள்ளதாக ஸ்ரீகாந்தா கூறினார். (இ)

### பஸ்ஸில்

னப்படையில் இருந்து மரணமடைந்த தனது சகோதரனின் மரணச்சடங்கில்கலந்து கொள்வதற்காக மதவாச்சி நோக்கி பயணம் மேற்கொண்டிருந்தார்.

இவர்பயணம் செய்த பிரஸ்தாப பயணிகள் பஸ்ஸை சீருடை தரித்தவர்கள் சோதனையிட முற்பட்டனர்.

இதனால் அச்சமடைந்து தப்பியோடியபோதே சிப்பாய் சுட்டுக் கொல்லப்பட்டார்.

### திருமலையில்

இச்சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை இரவு திருகோணமலை மூதூரில் உள்ள தமிழ்க் கிராமமான தங்கநகரில்இடம்பெற்றது.

இராணுவ கட்டுப்பாட்டில் உள்ள இக்கிராமத்தில் இடம்பெற்ற மேற்படி சம்பவத்தினால் கனகசுந்தரம் மோகன் (வயது-26) என்பவரே உயிரிழந்தார். சின்னப்பு ஜெயராஜா (வயது-25) என்பவர் காயமடைந்துள்ளார். (இ)

## வீட்டின் மீது பனை விழ்ந்து சிறுவன்காயம்

[மீசாலை]

வீட்டின் மீது பனைமரம் ஒன்று முறிந்து விழுந்ததனால் வீட்டில் உறக்கத்திலிருந்த இரண்டு வயதுச் சிறுவனொருவன் படுகாயமடைந்தான்.

நேற்று வல்வெட்டித்துறை பகுதியில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் காயமடைந்த சிறுவன் வல்வெட்டித்துறை ஆதாரவைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளான். (ந-222)

# சர்வகட்சி அரசுக்கு ஆதரவு வழங்குவோம்

## ரவூப் ஹக்கீம் தெரிவிப்பு

நாட்டின் பிரச்சினைகளை தீர்வுகாணும் சர்வகட்சி அரசுக்கே சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவு வழங்குமென்று முஸ்லிம் காங்கிரசின்தலைவரும்நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப்ஹக்கிம் தெரிவித்துள்ளார்.

மறைந்த அமைச்சர் எம்.எச் எம்.அஸ்ரப்பின் ஓராண்டு கிரார்த்த தினத்தை முன்னிட்டு கண்டியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர்மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; நம்பிக்கையில்லா பிரேரணை விவாதத்தின் போது, எக்கட்சியாவது பக்க சார்புடன் விவாதிக்குமானால் அதனை சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எதிர்க்கும்.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பொதுஜனஐக்கியமுன்னணியைஎதிாத்தமையாலேயே அதுஜே.விபியுடன்இணைந்து ஆட்சியை கொண்டு நடத்த வேண்டிய இக்கட்டான நிலைக்கு தள்ளப் பட்டுள்ளதெனவும் தெரிவித்தார் (ந-4

### பரு- கடலில்

தொடர்பாளர் ஸ்ரீ கடற்படையினருடன் தொடர்பு கொண்டு கடலில் தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

பலமணிநேரம்இடம்பெற்ற தேடுதலின் போது, 12 மீனவர்கள் மீட்கப்பட்டனர்; மேலும் மூன்று மீனவர்கள் பற்றிய விபரம் தெரியவரவில்லை:

இத்தேடுதல் நடவடிக்கையில் கடற்படையினருடன், ஈ.பி.டி. பியின் தொடர்பாளர் ஸ்ரீ, பருத்தித்துறை பிரதேச சபைத் தலைவர் ஸ்ரீ ரங்கேஸ்வரன் தென்மராட்சி அமைப்பாளர் சாள்ஸ் வல்வெட்டித்துறை அமைப்பாளர் யோகா ஆகியோரும் இணைந்து தேடுதலில் ஈடுபட்டிருந்தனர். ந.

### மரதன்

கோண்டாவில் சந்தியில் நேற்றுக் காலை 7:30 மணிக்கு போட்டி ஆரம்பமாகி ஓட்டவீரர்கள் பலாலி வீதியூடாக திருநெல்வேலி சந்திக்கு சென்று கொண்டிருந்த போதே பிரஸ்தாப இளைஞன் மயங்கிவிழுந்தான், நிகழ்வில் கடும்போட்டியுடன் வீரர்கள் ஓடிக்கொண்டிருந்ததால், பிரஸ்தாப இளைஞன் வீழ்ந்து உயிரிழந்ததை சகவீரர்கள் அறியாது, அவர் மயக்கமடைந்துள்ளார் என எண்ணி வேகமாக ஓடிக்கொண்டிருந்தனர்.

இவரது மறைவினால் நேற்று மாலை நடைபெறவிருந்த பாலர் பாடசாலை விளையாட்டுப் போட்டி ரத்துச் செய்யப்பட்டது.

கோண்டாவில் பகுதியெங்கும் கறுப்புக் கொடிகள் வாழைகள் கட்டப்பட்டு சோககீதம் இசைக்கப்படுகின்றது. (இ-செ-104-221)

### இந்திய

யல் பிரமுகர்களும் இருமுன்னணிப் பத்திரிகை யாளர்களும் உயிரிழந்துள்ளனர்.

கான்பூர் நகரில் அரசியல் கூட்டமொன்றில் கலந்துகொள்வதற்காக சென்ற இவர்களின் விமானம் கடும் மழை காலநிலை சீரின்மை காரணமாக விபத்துக்குள்ளானதிலே உயிரிழந்துள்ளனர். [இ]

### கொழும்பு

யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

புறக்கோட்டை, கோட்டை கொம்பனித்தெரு கொட்டாஞ்சேனை, கறுவாத்தோட்டம் ஆகிய பகுதிகளிலேயே தேடுதல் இடம் பெற்றது.

கொட்டாஞ்சேனைப் பகுயில் 19பேரும், புறக்கோட்டைப் பகுதியில் 7பேரும் கறுவாத் தோட்டத்தில் ஆறு பேரும் கோட்டைப் பகுதியில் 12 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் அனைவரும் தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டு வருகின்றனர். விசாரணையின் போதுசந்தேகத்திற்கிடமானவர்கள் குற்றத்தடுப்பு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்படவுள்ளனர்.

தற்கொலைக் குண்டுதாரியின் அங்கி கண்டுபிடிக்கப்பட்டமை தொடர்பாக உடன் விசாரணை நடத்துமாறு குற்றப் புலனாய்வுப் பொலிஸாருக்கு பொலிஸ் மா அதிபர் லக்கி கொடித்துவக்கு உத்தரவிட்டுள்ளார். (வ)


Jaffna Technical Institute

JAFFNA - SRI LANKA

Regd. NO. 15251 T.P. 3335

தொழிற் பயிற்சிகள்

★ Radio, T. V. and Video Deck Repairing

சகல இன றேடியோ, ரீ.வி, வீடியோ டெக் மற்றும் எலக்ரோனிக் உபகரணங்கள் என்பன திருத்தும் முறை ஆரம்பத்திலிருந்து பயிற்சி அளிக்கப்படும். (காலம்: 10 மாதங்கள்)

★ Motor Rewinding and Electrical Wiring

சகல இன மோட்டார், (F) பான் ரான்ஸ்போமர்கள் றிவைண்டிங் செய்யும்முறை மற்றும் வீட்டு மின்னிணைப்பு முறை என்பன பயிற்சி அளிக்கப்படும். (காலம்: 6 மாதங்கள்)

★ Motor Cycle Mechanism

சகல இன மோட்டார்சைக்கிள், நீரிறைக்கும் இயந்திரம் திருத்தும்முறை ஆரம்பத்திலிருந்து பயிற்சி அளிக்கப்படும். (காலம்: 5 மாதங்கள்)

★ Air Conditioning and Refrigeration

சகல இன குளிர்சாதனப்பெட்டி மற்றும் எயார் கொண்டிசன் திருத்தும் முறை ஆரம்பத்திலிருந்து பயிற்சி அளிக்கப்படும். (காலம்: 6 மாதங்கள்)

★ City and Guilds of London Exam

(1) Power (2) Electronics

புதிய பயிற்சிகள் ஆரம்பம்-

05-10-2001 (கிழமை நாட்களில்) 06-10-2001 (சனி, ஞாயிறு நாட்களில்)

N. B:-

★ பயிற்சி நெறிகள் யாவற்றுக்கும் ஒரு வருட முழுநேரச் செய்முறைப் பயிற்சி (Practical Training) அளிக்கப்படும்.

- DIRECTOR -

266/1, Stanley Road, Jaffna. (றெயில்வே கடவை அருகில்)

No. 7, Palaly Road, Jaffna.

(கி - 2661)



நன்றி நவில்கின்றோம்

24-09-2001 அன்று அமுக்கவெடி விபத்தில் படுகாயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் 26-09-2001 அன்று சிவபதமடைந்த.

எமது குடும்பத் தலைவர்

முத்துலிங்கம் சதீஸ்குமார்

(சந்நிதி முருகன் ஆட்டோ உரிமையாளர்)

அவர்களின் மரணச் செய்தியைக் கேள்வியுற்று நேரில் வந்து ஆறுதல்கூறி எமது துயரத்தில் பங்கெடுத்தவர்கள், தொலைபேசிமூலம் அனுதாபம் தெரிவித்தவர்கள், மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தியவர்கள், கண்ணீர் அஞ்சலி துண்டுப்பிரசுரம் வெளியிட்ட பொது அமைப்புக்கள் மற்றும் குடும்பத்தவர்கள், பத்திரிகைமூலம் கண்ணீர் அஞ்சலி தெரிவித்தவர்கள், இரங்கலுரை நிகழ்த்தியவர்கள், இறுதிச் சடங்கில் கலந்து கொண்ட யாழ்-மாவட்ட முச்சக்கர வண்டி சங்கத்தினர், முச்சக்கரவண்டி உரிமையாளர்கள், சாரதிகள். வர்த்தகர்கள், நண்பர்கள் உறவினர்கள், எமக்கு தோளோடு தோள்நின்று ஒத்துழைத்து எமது துயரில் கலந்து பங்கெடுத்தவர்கள் அனைவருக்கும் எமது உளப்பூர்வமான நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் ஆத்மா சாந்திபெற பிரார்த்திப்போம்.

விளையாட்டரங்க வீதி,
கோப்பாய் தெற்கு.
கோப்பாய்.

குடும்பத்தினர்.

(கி2662)


இப் பத்திரிகை ''வலம்புரி'' அன்கோ ஸ்தாபனத்தாரால் இல. 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2001-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 01-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.